உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம்
கொழும்பு பல்கலைக்கழகம்



ஆண்டறிக்கை

2020

உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர்த் தொழில் நுட்பவியல் நிறுவகம்


கொழும்பு பல்கலைக்கழகம்

ஆண்டறிக்கை - 2020

தொலை நோக்கு

**“மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்களில்
தலைசிறந்ததொரு
சர்வதேச மையமாகத் திகழ்வது”**

பணி ஆணை



2020 ACHIEVEMENTS

NEW APPOINTMENTS



Ms. Sudeni Peiris
Deputy Bursar
2020.12.01

Dr. Dilusha Fernando
Scientific Assistant BDU
2020.07.31

Ms. Kaveesha Banadara
Scientific Assistant IT
2020.08.07

Ms. Uma Rajagopalan
Scientific Assistant Cell Biology
2020.10.19



Prof. O.V.D.S.J. Weerasena
Professor (Merit)
2019.01.31

Dr. Kanishka Senathilake
Post- Doctoral Research Fellow
2020.12.15

Dr. Harindra Sathkumara
Post- Doctoral Research Fellow
2020.12.15


Mr. James Thambyrajah
Assistant Lecturer (CMI)
2020.02.24

Ms. Joanne Kotelawala
Assistant Lecturer (MLS)
2020.12.01

DISSEMINATION OF KNOWLEDGE

SHORT COURSES AND TRAINING PROGRAMMES

Seminar on Simultaneous multiplexed (to 800-plex) detection of mRNA, Proteins and DNA using single –molecule optical barcodes was conducted.



In-plant training of 3 months was completed by Ms. M.N. Fara Nifla (an undergraduate student from University of Wayamba).




Practical Demonstration on Restriction Enzyme Digestion on 10th March 2020 for 09 undergraduate students was conducted by Dr Sumadee De Silva and Dr Tharmini Sundralingam.



Demonstration on Real Time PCR on 17th January 2020 for undergraduate students participated from Wayamba University of Sri Lanka conducted by Dr Nilupa Gunaratna



Demonstration on DNA Sequencing on 17th January 2020 for undergraduate students participated from Wayamba University of Sri Lanka conducted by Dr Ruwandi Ranasinghe, Ms Joanne Koelawala and Ms Anjana Welikala



AWARDS



Vice Chancellor's Award for Research Excellence 2019 was received by Prof Shiroma Handunnetti



President's Award for Scientific Publications in Year 2018 were received by Prof Shiroma Handunneti and Dr Narmada Fernando.



Senate Award for Research Excellence 2019 was received by Prof Kamani Tennekoon, Dr Sumadee de Silva and Dr Sameera Samarakoon




Senate Award for Research Excellence 2018 was received by Prof OWDSJ Weerasera, Prof Kamani Tennekoon, and Dr Sameera Samarakoon





James Thambyrajah received the Third prize in the oral presentations in the 29th Annual Scientific Sessions, Sri Lanka Collage of Microbiologists





Yenuli Fernando (A/L Student) who completed her research project at IBMBB received SLMA Prize for the best poster received at the133rd Anniversary International Medical Congress 2020 for the poster presentation titled "Risk Factors and School Absenteeism in Children with Asthma from an Urban Area of Sri Lanka" .

PMLP Fernando and Yenuli Fernando, who have carried out their research at IBMBB, were selected to present their findings at the World Science Day organized by the National Science Foundation on 20th November 2020.




INTERNATIONAL RESEARCH FUNDING RECEIVED

Rs. 2,314,254.38

Source : ICGEB Grant

Source : Indo Sri Lanka Grant



பணிப்பாளரது மீளாய்வு:

ஐபீஎம்பீபீ இன் முக்கிய செயற்பாட்டுத் துறைகள் முறையே SLQF மட்டங்கள் 8-12 ஆகியவற்றிற்கு இணையான எம்எஸ்சீ, எம்.்பில் மற்றும் பீஎச்டீ நிகழ்ச்சித்திட்டங்கள் அடங்கலான பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களாகும். ஐபீஎம்பீபீ பட்டதாரி மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில்லையெனினும், கொழும்பு பல்கலைக்கழகத்தினதும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களினதும் பட்டக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அது ஒத்துழைப்பு வழங்கும்.

ஐபீஎம்பீபீ திருத்தியமைக்கப்பட்ட கலைத்திட்டங்கள் கொண்ட மூன்று முழுநேர முதுமானிப் பட்டக் கற்கை நெறிகளை 2019 லிருந்து நடத்துகின்றது. அவை (i)மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்கள் (MLS) -முழுநேரம், ii) கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல் (CMI) - முழுநேரம், மற்றும் iii) உயிர் தொழில் நுட்பவியல் (BI) ஆகிய பட்டங்களிலானவையாகும். 2019 ஆம் ஆண்டு அனுமதி பெற்ற மாணவர்களுக்கு இம்மூன்று முதுமானி கற்கை நெறிகளினதும் (MLS, CMI மற்றும் BI) கலைத்திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டன. இவ்வாறு, தற்போதைய முதுமானி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒரு வெளியேறல்நிலைப் பட்டமாக பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவோடு (SLQF level 8) முதுமானிப் பட்டத்தையும் (SLQF level 9) விஞ்ஞான முதுமானிப் பட்டத்தையும் (SLQF level 10) வழங்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் COVID -19 தொற்று ஏற்பட்டமையால், இம்மூன்று நிகழ்ச்சித் திட்டங்களும் ஒரு கலப்புக் கற்கை முறைமைக்கு மாற்றப்பட்டன. மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்கள், நோயெதிர்ப்பியல், உயிர்த் தகவலியல் மற்றும் இலங்கையில் அபிவிருத்திக்கு பொருத்தமான அவற்றோடு தொடர்புபட்ட துறைகள் ஆகியற்றில் சிறப்புப் பயிற்சி வழங்குவதும் கலாநிதிப் பட்டங்களுக்கு (PhD) இட்டுச்செல்லும் மேலும் உயர்தரக் கற்கைகளை இளம் பட்டதாரிகள் தொடர்வதற்கு அவர்களை ஊக்குவிப்பதுமே இக்கற்கை நெறிகளின் பிரதான நோக்கமாகும்.

இப்பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக ஐபீஎம்பீபீ அறிவைப் பரப்புவதற்காக மேலும் பல குறுங்காலப் பயிற்சி நெறிகள், செயலமர்வுகள், விருந்தினர் விரிவுரைகள் மற்றும் கட்டுறு பயில்வு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றையும் நடத்துகின்றது. மருத்துவ இரசாயனவியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியலில் நான்காவது முதுமானி கற்கைநெறியை நடத்துவதற்கான திட்டமொன்றும் விருத்தி செய்யப்பட்டு வருகிறது. .

2020 ஆம் ஆண்டு சாதனைகளின் சுருக்கம்:

2020 ஆம் ஆண்டில் புதிய பதிவுகள்	முதுமானி	மூலக்கூற்று உயிர் விஞ்ஞானம்	15
	முதுமானி	கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல்	07
	MSc	மூலக்கூற்று உயிர் விஞ்ஞானம்	04
	MSc	கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல்	04
	தத்துவ முதுமானி/தத்துவக் கலாநிதி (MPhil/PhD)		03
2020ஆம் ஆண்டு வெளியேறுகை	தத்துவக் கலாநிதி		02
	MSc	மூலக்கூற்று உயிர் விஞ்ஞானம்	06
	MSc	கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல்	06
	மூலக்கூற்று உயிர் விஞ்ஞான முதுமானி		01
	கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியிலில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா		01
வெளியீடுகள்	முழுப் பத்திரங்கள்	அடையாளமிடப்பட்ட, சர்வதேச சஞ்சிகைகள்	25
	முழுப் பத்திரங்கள்	அடையாளமிடப்படாத சஞ் சிகைகள்	01
	ஆய்வுத் தொடர்பாடல்கள்	உள்நாட்டு	13
		சர்வதேச	02
கிடைக்கப்பெற்ற விருதுகள்			11

இவற்றின் விபரங்கள் இவ்வறிக்கையின் பிறிதோர் இடத்தில் விளக்கப்பட்டுள்ளன.

பேராசிரிர் ஷிரோமா ஹந்துநெத்தி
பணிப்பாளர்/ ஐபீஎம்பீபீ

உள்ளடக்கம்

வரலாற்றுரீதியான மீளாய்வு	08
ஐபீஎம்பீபீ இன் பணிப்பாளர்கள	09
துரித தொடர்பு	09
2020 ஆம் ஆண்டு செயலாற்றுகை பற்றிய ஒரு கண்ணோட்டம்	10
நிறுவன அட்டவணை	11
முகாமைத்துவ சபை உறுப்பினர்கள்	12
சர்வதேச அங்கீகாரம்	13
2020 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற தேசிய விருதுகள்	13
மனிதவள அபிவிருத்திக்கான பங்களிப்பு	14
பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்	14
குறுகியகால பயிற்சி நெறிகள்	21
பட்டப் பின்படிப்பு பட்டமளிப்பு	22
இணைவழி திறந்த தினம்	22
ஆராய்ச்சிச் செயற்பாடுகள்	23
ஓட்டுண்ணிமூல மற்றும் தொற்று நோய்கள் பற்றிய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	23
மூலக்கூற்று மருத்துவம்	29
தாவர மூலக்கூற்று உயிரியலும் தாவர வளர்ச்சிதை மாற்றவியல்கள்	34
உயிர் இரசாயனவியலும் நுண் உயிர்களின் மூலக்கூற்று உயிரியலும்	36
மருத்துவத் தாவரங்கள்	36
கைத்தொழில் பிரயோகங்கள்	38
இலங்கையில் உள்ள விலங்கு இனங்களின் மூலக்கூற்றுரீதியான இனங்காணல	38
தியானம் மற்றும் உடல் நலம் தொடர்பான ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம	39
சேவைகள்	39
2020 இல் வர்த்தக அபிவிருத்தி அலகின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள	39
தர உத்தரவாதப் பிரிவு – ஐபீஎம்பீபீ	40
ஐபீஎம்பீபீ விற்கு வருகை தந்தோர்	41
பணியாளர் மேம்பாடு மற்றும் பயிற்சி	41
தடங்கல்கள்	42
பணியாளர் மேம்பாடு மற்றும் நலனோம்புகைச் செயற்பாடுகள்	43
மனித வளங்கள்	44
31 டிசம்பர் 2020 அன்று உள்ளவாறான பணியாளர் தெளிவுபடுத்தல்	44
ஆராய்ச்சி வெளியீடுகள்	46
ஆராய்ச்சித் தொடர்பாடல்கள்	50
சூழலைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகள் பற்றிய எதிர்வு கூறல் அறிக்கை	52

அட்டவணை 1: நடைபெற்றுக்கொண்டிருக்கும் எம்.ஃபில்/பிஎச்டி பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் புதிய பதிவுகள் - 2020 54
அட்டவணை 2: ஏனைய உயர் கல்வி நிறுவனங்களில் பதிவுசெய்து 2020 இல் ஐபீஎம்பீபீ ஆய்வுகூடங்களில் ஒரு பகுதி கற்கைகளைமேற்கொண்ட மாணவர்கள் 60
அட்டவணை 3: ஆய்வு நிதியளிப்பு – 2020 61
அட்டவணை 4: சமர்ப்பிக்கப்பட்ட எம்பில்/பி.எச்.டி ஆய்வுப் பத்திரங்கள் - 2020 63
அட்டவணை 5: எம்எஸ்சீ ஆய்வுப் பத்திரங்கள், வழங்கப்பட்டப் பட்டங்கள் -2020 - மூலக்கூற்று உயிர்விஞ்ஞானங்கள் 64
அட்டவணை 6: எம்எஸ்சீ ஆய்வுப் பத்திரங்கள், வழங்கப்பட்டப் பட்டங்கள் -2020 – கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல் 65
அட்டவணை 7: 2020 பட்டமளிப்பில் வழங்கப்பட்டப் பி.எச்.டி/எம்பில் பட்டங்கள் 66
அட்டவணை 8: (அ) 2020 பட்டமளிப்பில் வழங்கப்பட்டப முதுமானிப் பட்டங்கள் 66
அட்டவணை 8: (ஆ) 2020 பட்டமளிப்பில் வழங்கப்பட்ட பட்டப் பின்படிப்பு டிப்ளோமா 66
அட்டவணை 9: **ஆராய்ச்சி ஒத்துழைப்பாளர்கள்** 67
ஆண்டு நிதி அறிக்கை 69
2020 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வு பணிகள் தொடர்பான மீளாய்வு 86
மட்டுப்பாடுகள் - 2020 87
2021 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டம் 88
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை - 2020 90
ஆண்டறிக்கையினதும் கணக்குகளினதும் சுருக்கம் - 2020 95
வளங்கள், மாணவர்கள், மற்றும், கல்விசார் பணியாளர்கள் பற்றிய விபரம் 95
நிர்வாக மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் மற்றும், ஆய்வு, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரம் 96
நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்பற்றிய விபரம் 96
விருதுகள், தொடங்கப்பட்ட புதிய கற்கைநெறிகள் மற்றும் செலவினங்கள் 97
(மூலதன, மீண்டெழும்) பற்றிய விபரம் 97
செலவினங்களின் (கருத்திட்ட) விபரம், நிதி முன்னேற்ற விபரம் 97
நிதிச் செயலாற்றுகை பற்றிய பகுப்பாய்வு – 2020 99
வருடவாரியாக மாணவர் விபரம் - எம்எஸ்சீ, எம்.ஃபில்/பிஎச்டி நிகழ்ச்சித் திட்டங்கள் 100

வரலாற்றுரீதியான மீளாய்வு

21 ஆம் நூற்றாண்டில் தகவல் மற்றும் கணனி தொழில்நுட்பம் மற்றும் மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்கள் ஆகிய இரண்டு துறைகள் மேலோங்கி நிற்கும். விஞ்ஞானம் மற்றும் அறிவு ஆகியவற்றின் அடிப்படையிலான அபிவிருத்தியில் முதலீடு செய்த நாடுகள் அவ்வாறு செய்யாத நாடுகளோடு ஒப்பிடுகையில் கணிசமானளவு முன்னேற்றமடைந்துள்ளன. இலங்கை இன்னும் உயிர் தொழில்நுட்பம் மற்றும் அதனோடு தொடர்புபட்ட துறைகள் சார்ந்த துடிப்பான கைத்தொழில் ஒன்றைக் கொண்டிருக்காதபோது, எமது அயல் நாடுகள் அதில் எம்மைவிட வெகுதூரம் முன்னே உள்ளன. பயிற்றப்பட்ட மனிதவள தட்டுபாடே இலங்கையில் உயிர் தொழில்நுட்பம் மற்றும் அதனோடு தொடர்புபட்ட துறைகள் சார்ந்த கைத்தொழில்கள் இல்லாமைக்கான ஒரு முக்கிய காரணமாகும்.

உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியில் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகமானது (ஐபீஎம்பீபீ), அந்நிறுவனத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் பரிந்தரைகளின்பேரில் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்படும் உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியில் மற்றும் உயிர் தொழில்நுட்பவியலின் அத்தகைய பிரிவுகளில் அறிவு, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் ஆலோசனை ஆகியவற்றை வழங்கும் நோக்கில் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஒரு சுயாதீன நிறுவகமாகத் தாபிக்கப்பட்டது. சுவீடிஸ் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம்/அபிவிருத்தியடையும் நாடுகளுடன் ஆராய்ச்சி ஒத்துழைப்பிற்கான சுவீடிஸ் நிறுவனத்தின் (சீடா/சரெக்) ஆதரவோடு பேராசிரியர் எரிக் எச். கருணாநாயக்கவினால் வழிநடத்தப்பட்ட மூலக்கூற்று உயிரியலிலான மிக வெற்றிகரமான ஓர் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் இறுதியில் ஐபீஎம்பீபீ இன் தாபிப்பிற்கு இட்டுச் சென்றது. ஐபீஎம்பீபீ கட்டிட நிர்மாணமும் உபகரணங்களும் சீடாவின் (சீடா/INEC)முதலீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டன. *உயிர்* இரசாயனவியல், மூலக்கூற்றுயிரியல் மற்றும் உயிர் தொழினுட்பவியல் நிறுவகத்தின் (ஐபீஎம்பீபீ) நிர்மாணம் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றுக்கு சுவீடிஸ் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தால் (சீடா) இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட 15 மில்லியன் சுவீடிஸ் குறோனர்ஸ் இலகுகடன் ஒன்றினால் நிதியளிக்கப்பட்டது.

உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழினுட்பவியல் நிறுவகம் (ஐபீஎம்பீபீ) 2004 ஏப்ரல் 28ஆம் திகதி கொழும்பிலுள்ள சுவீடன் தூதரகத்தின் நிறுவனத் தலைவர் மேதகு ஏன் மாரி ∴பெலேனியல் மற்றும் சுவீடனிலுள்ள உப்சலா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் உல்∴ப் பீற்றர்சன் ஆகியோரால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிறுவகம் தொடர்பான கட்டளைச்சட்டம் 2003 ஏப்ரல் 03 ஆம் திகதிய 1282/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. ஐபீஎம்பீபீ கட்டிடம் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் அமைந்துள்ளது. ஐபீஎம்பீபீ யானது, முழுமையாகத் தன்னியக்கமாக்கப்பட்ட மரபணுத் தொடர்கள், மைக்றோஎரேய் ஸ்கேனர்கள். எ∴ப்பிஎல்சீ, எச்பீஎல்சீ,∴ப்ளோரசன்ஸ் மற்றும் பேஸ் கண்ட்றாஸ்ட் நுணுக்குக்காட்டிகள், லேமினர் புளோர் ஹூட்ஸ், கலன் வளர்ப்பு வசதிகள், இன்செக்டோறி, குளிர் அறைகள், உள்ளூர் பகுதி வலைப்பின்னல், டெடிகேடட் ஒப்டிகள் நார் கம்பிகள் மூலமான இணையத்திற்கான வசதி முதலிய மூலக்கூற்று உயிர் விஞ்ஞானத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து நவீன உபகரணங்களையும் கொண்டிருப்பதோடு முழுமையாக குளிரூட்டப்பட்டுள்ளது. ஐபீஎம்பீபீ 2004 இல் தனது ஆராய்ச்சிச் செயற்பாடுகளை ஆரம்பித்தது. 2004 இல் பேராசிரியர் எரிக் கருணாநாயக்கவின் வழிநடத்தலில் எந்த மாணவர்களின் தத்துவக முதுமானி மற்றும் தத்துவக் கலாநிதி ஆய்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தனவோ, அம்மாணவர்கள் ஐபீஎம்பீபீ இல் தமது கற்கைகளைத் தொடர்ந்ததோடு, ஆய்வு பட்டங்களுக்கு புதிதாக பதிவுசெய்தல் 2004 இல் தொடங்கியது. "மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்களில்" ஒன்றும் "கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியலில்" மற்றொன்றுமாக இரண்டு முதுமானிக் கற்கை நெறிகள் 2005 பெப்ரவரியில் தொடங்கப்பட்டன. உயிர் தகவலியலிலான மூன்றாவது விஞ்ஞான முதுமானிக் கற்கைநெறி கொழும்புப் பல்கலைக்கழக கணனிப் பாடசாலையுடனான ஒரு கூட்டு நிகழ்ச்சித் திட்டமாக 2012 மே மாதம் தொடங்கியது.

இம் மூன்று முதுமானிக் கற்கைநெறிகளுக்குமான கலைத்திட்டங்களின் மீளாய்வு பூர்த்திசெய்யப்பட்டு, 2019 ஆம் ஆண்டு இறுதியளவில் SFQF மட்டங்கள் 8-10 வோடு இணைக்கப்பட்டது. புதிய கலைத் திட்டம் கொண்ட இம்மூன்று பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் கொழும்புப் பல்கலைக்கழகப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட திருத்தப்பட்ட துணை விதிகளோடும் ஒழுங்குவிதிகளோடும் 2019 இல் ஆரம்பித்து, 2020 இல் தொடர்ந்து நடைபெற்றன.

ஐபீஎம்பீபீ இன் பணிப்பாளர்கள்

தற்போதைய பணிப்பாளர்:

பேராசிரிர் ஷிரோமா எம்.ஹந்துநெத்தி

தாபகப் பணிப்பளர்:

பேராசிரியர் எரிக் எச்.கருணாநாயக்க	2004 – 2007

கடந்தகால பணிப்பாளர்கள்:

பேராசிரியர் கமனி எச் தென்னக்கோன்	2007 – 2012
பேராசிரியர் கமனி எச் தென்னக்கோன்	2013 ஜனவரி-மார்ச்(தற்காலிகப் பணிப்பாளர்)
போராசிரியர் எம் எச் றிஷ்வி ஷெரிப்	ஏப்.2013 – செப்.2014 (தற்காலிக பணிப்பாளர்)
பேராசிரியர் ஷிரோமா ஹந்துநெத்தி	ஒக்ட்2014 -ஜன. 2015(தற்காலிக பணிப்பாளர்)
பேராசிரியர் ஷிரோமா ஹந்துநெத்தி	பெப்ரவரி 2015 – பெப்ரவரி 2019

துரித தொடர்புகள்.

பதிவு செய்யப்பட்ட காரியாலயம்: இலக்கம் 90, குமாரதுங்க முனிதாச மாவத்தை, கொழும்பு 03, இலங்கை

தொலைபேசி இலக்கங்கள்:

பொது	: +94-11-2552528
பணிப்பாளர்	: +94-11-2552534
சிரேஸ்ட உதவிப் பதிவாளர்	: +94-11-2553672
சிரேஸ்ட உதவி காசாளர்	: +94-11-2553683

தொலைநகல் இலக்கங்கள்:

பணிப்பாளர்	: +94-11-2552529
பொது	: +94-11-2553683

மின்னஞ்சல்:

director@ibmbb.cmb.ac.lk


sar@ ibmbb.cmb.ac.lk

sab@ ibmbb.cmb.ac.lk/ db@ ibmbb.cmb.ac.lk

விசாரணை:

info@ibmbb

2020ஆம் ஆண்டு செயலாற்றுகை ஒரே பார்வையில்




பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் (2015 – 2020)

ஆண்டு	கற்கைநெறி		பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை	பட்டம் பெற்றோர் எண்ணிக்கை
2020	முதுமானி (SLQF-9)	மூலக்கூற்று உயிர் விஞ்ஞானம்	15	01
		கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல	07	00
	MSc (SLQF-10)	மூலக்கூற்று உயிர் விஞ்ஞானம்	04	06
		கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல்	04	06
	கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியிலில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா (SLQF-8)			01
	MPhil & PhD		02	02
2019	Masters (SLQF-9)	மூலக்கூற்று உயிர் விஞ்ஞானம்	10	5
		கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல்	07	2
		உயிர்த் தகவலியல்	19	0
	MPhil & PhD		2	9
2018	MSc (SLQF-10)	மூலக்கூற்று உயிர் விஞ்ஞானம்	12	9
		கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல்	7	6
	MPhil & PhD		5	3
2017	MSc (SLQF-10)	மூலக்கூற்று உயிர் விஞ்ஞானம்	7	4
		கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல்	4	7
	உயிர்த் தகவலிணயலில் பட்டப் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா (SLQF-8)			1
	MPhil & PhD		5	4
2016	MSc (SLQF-10)	மூலக்கூற்று உயிர் விஞ்ஞானம்	11	17
		கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல்	10	0
	MPhil & PhD		4	1
2015	MSc (SLQF-10)	மூலக்கூற்று உயிர் விஞ்ஞானம்	5	5
		கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல்	8	6
		உயிர்த் தகவலியல்	NA	5
	உயிர்த் தகவலிணயலில் பட்டப் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா (SLQF-8)			2
	MPhil & PhD		6	0

NA - Not advertised

நிறுவன கட்டமைப்பு


நிரல் அமைச்சு
(உயர் கல்வி அமைச்சு)
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
(UGC)
கொழும்பு பல்கலைக்கழகம்
துணை வேந்தர்
உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றம் உயிர்தொழில்நுட்பவியல் நிறுவகம் (ஐபீஎம்பீபீ)
பணிப்பாளர் மற்றும் முகாமைத்துவ சபை
கணக்காய்வுக் குழு
DR/ SAR
DB/ SAB
நிதி மற்றும் முகாமைத்துவ குழு
ஆராய்ச்சி மற்றும் உயர் பட்டங்கள் குழு
கல்விக் குழு
AR
தர உத்தரவாத பிரிவு
வர்த்தக அபிவிருத்தி பிரிவு
கற்கைச் சபை - மூலக்கூற்று உயிர் விஞ்ஞாம்
கற்கைச் சபை – கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல்
கற்கைச் சபை – உயிர்த் தகவலியல்

பணிப்பாளர்

பேராசிரியர் ஷிரோமா எம் ஹந்துநெத்தி

முகாமைத்துவ சபை உறுப்பினர்கள்

பேராசிரியர் ஷிரோமா ஹந்துநெத்தி - பணிப்பாளர் - ஐபீஎம்பீபீ, (தலைவர்)
செல்வி எஸ்எஸ் இவாஞ்சலின், செயலாளராக பிரேரிக்கப்பட்டவர்,பணிப்பாளர் (அபிவிருத்தி), உயர் கல்வி அமைச்சு
பேராசிரியர் எரிக்.எச் கருணாநாயக்க ப.மா.ஆ.வினால் நியமிக்கப்பட்டவர்.
பேராசிரியர் ஐரா தாப்ரூ, ப.மா.ஆ.வினால் நியமிக்கப்பட்டவர்
பேராசிரியர் ரமனி விஜேசேக்கர, ப.மா.ஆ.வினால் நியமிக்கப்பட்டவர்
பேராசிரியர் எஸ்.பி. தெரணியகல, ப.மா.ஆ.வினால் நியமிக்கப்பட்டவர் (2020 ஜனவரி 16 முதல்)
திரு. திலக் கருணாரத்ன, பேரவையினால் நியமிக்கப்பட்டவர்
செல்வி பத்மினி ரனவீர, பேரவையினால் நியமிக்கப்பட்டவர்(2020 ஜனவரி 30 முதல்)
பேராசிரியர் டபிள்யூ இந்திரா. நாணயக்கார, செனட்டினால் நியமிக்கப்பட்டவர்.
பேராசிரியர் சேனக்க ராஜபக்ஷ செனட்டினால் நியமிக்கப்பட்டவர்
பேராசிரியர் ஜெனிபர் பெரேரா, பீடாதிபதி/மருத்துவம், கொழும்பு பல்கலைக்கழகம், பதவிவழி(2020 மார்ச் வரை)
பேராசிரியர் வஜிர திசாநாயக்க, பீடாதிபதி/மருத்துவம், கொழும்பு பல்கலைக்கழகம், பதவிவழி (2020 மார்ச் முதல்)
பேராசிரியர் கே.ஆர்.ஆர்.மகாநாம பீடாதிபதி/விஞ்ஞானம், கொழும்பு பல்கலைக்கழகம், பதவிவழி(2020 ஜூலை வரை)
பேராசிரியர் உப்புல் சொன்னாதர,பீடாதிபதி/விஞ்ஞானம், கொழும்பு பல்கலைக்கழகம், பதவிவழி (2020 ஜூலை முதல்)
பேராசிரியர் கே.பி.ஹேவகமகே, பணிப்பாளர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினிப் பாடசாலை, பதவிவழி
பேராசிரியர் கித்மினி சிறிதேவ, தலைவர்/உயிர் இராசாயனவில் மற்றும் மூலக்கூற்று உயிரியல், மருத்துவ பீடம், பதவிவழி

சர்வதேச அங்கீகாரம்:

ஐபீஎம்பீபீ யானது, உப்சலா பல்கலைக்கழகத்தின் இரசாயன விஞ்ஞானங்களினாலான சர்வதேச நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஆசிய வள நிலையமாகவும் (IPICS) ஐரோப்பிய மூலக்கூற்றுயிரியல் வலையமைப்பிற்கான(EMBnet). தேசிய கிளையாகவும் தொடர்ந்தும் இருந்து வருகிறது.

2020 இல் கிடைக்கப்பெற்ற தேசிய விருதுகள்

அ) 2018 இல் விஞ்ஞான வெளியீடுகளுக்கான ஜனாதிபதி விருது
பேராசிரியர் ஷிரோமா ஹந்துநெத்தி
கலாநிதி நர்மதா பெர்னாண்டோ ஆகியோருக்குக் கிடைத்தது.

ஆ) ஆராய்ச்சிச் சிறப்பிற்கான துணைவேந்தர் விருது - 2019
பேராசிரியர் ஷிரோமா ஹந்துநெத்தி

இ) ஆராய்ச்சிச் சிறப்பிற்கான மேலவை விருது- 2018
பேராசிரியர் ஓ வீ டீ எஸ் ஜே வீரசேன – மேலவை விருது (திறந்த பிரிவு)
பேராசிரியர் கமனி தென்னக்கோன் – மேலவை விருது (திறந்த பிரிவு)
கலாநிதி சமீர சமரக்கோன் - மேலவை விருது (ஆரம்பகால தொழில்வாழ்க்கை)

ஈ) ஆராய்ச்சிச் சிறப்பிற்கான மேலவை விருது- 2019
பேராசிரியர் கமனி தென்னக்கோன் – மேலவை விருது (திறந்த பிரிவு)
கலாநிதி சுமதி டீ சில்வா– மேலவை விருது (திறந்த பிரிவு)
கலாநிதி சமீர சமரக்கோன் - மேலவை விருது (ஆரம்பகால தொழில்வாழ்க்கை)

உ) இலங்கை நுண்ணுயிரியலாளர் கல்லூரியின் 29 வது வருடாந்த விஞ்ஞானக் கூட்டத்தொடரில் வழங்கபபட்ட விருதுகள்
தம்பிராஜா ஜேசீ, ஜயமக சீஜேஎஸ், **ரத்னாயக்க ஏகேடீவீவை, ஹந்துநெத்தி எஸ், பெர்னாண்டோ என்,** இலங்கையில் நோயினங்காணல் ஆய்வுகூடமொன்றிற்கு அனுப்பப்பட்ட கன்சிகுளோவியர் எதிர்ப்புச் சக்தி கொண்ட சீஎம்வீ தொற்று உடைய நோயாளர்களில் உள்ள UL97 திரிபடைதல்களைக் கண்டறிவதற்கான பூர்வாங்க ஆய்வு, OP6 வாய்மூல சமர்ப்பணத்தில் மூன்றாம் பரிசு வென்றார்.

ஊ) மிகச் சிறந்த சுவரொட்டிக்கான SLMA பரிசு – 133 வது வருடாந்த சர்வதேச மருத்துவ காங்கிரஸ் 2020
“இலங்கையின் நகர் புறமொன்றில் ஆஸ்மா நோயுடைய சிறுவர்களில் நிலவும் இடர் காரணிகள் மற்றும் பாடசாலைக்கு வருகை தராமை” **– பெர்னாண்டோ வைஎன்,** அனுராதா கேடப்ளியுடீஏ, டீ சில்வா யு, அலகக்கோன் எம், **ஹந்துநெத்தி எஸ்,** விக்கிரமசிங்க பி.

மனிதவள அபிவிருத்திக்கான பங்களிப்பு

பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்

எம்.ஃபில்/பிஎச்டி நிகழ்ச்சித் திட்டங்கள்: 2020 இல் மூன்று புதிய எம்பில்/பிஎச்டி மாணவர்கள் பதிவு செய்துகொண்டனர். ஐபீஎம்பீபீ யில் மொத்தம் இருபத்தேழு பதிவு செய்த எம்பில்/பிஎச்டி மாணவர்கள் இருந்தனர். எம்.ஃபில்/பிஎச்டி பணிகளை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் ஆய்வுச் செயற்பாடுகள் எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன. எம்.ஃபில்/பிஎச்டி பட்டத்திற்காக வேறு உயர் கல்வி நிறுவனத்தில் பதிவு செய்துகொண்ட ஒரு மாணவர் தனது ஆய்வின் ஒரு பகுதியை ஐபீஎம்பீபீ யில் மேற்கொண்டார். இரண்டு பிஎச்டி மாணவர்கள் தமது ஆய்வுப் பத்திரங்களை பரிசீலனைக்குச் சமர்ப்பித்தனர். இரண்டு பிஎச்டி மாணவர்கள் தமது வாய்மூல பரிட்சைகளை 2020 இல் நிறைவு செய்தனர். இரண்டு பிஎச்டி மாணவருக்கு 2020 டிசெம்பரில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டமளிக்கப்பட்டது.

(எம்.ஃபில்/பிஎச்டி மாணவர் நிரலுக்காக அட்டவணை 1 மற்றும் 2 யும் அவர்களது கற்கைகளுக்கு அடிப்படையாக அமையும் நடைபெற்றுவரும் மற்றும் புதிய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு கிடைக்கப்பெற்ற நிதிகளுக்காக அட்டவணை 3யும் பார்க்கவும்). அட்டவணை 5, 6, 7 மற்றும 8 ஆகியன 2020 இல் பரீட்சை நடைமுறைகளை நிறைவு செய்த பிஎச்டி மற்றும் எம்எஸ்சீ மாணவர்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்கியுள்ளன.

எம்எஸ்சீ நிகழ்ச்சித்திட்டங்கள்: 2020 மார்ச்சில். மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்கள், கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல் மற்றும் உயிர் தகவலியல் ஆகிய மூன்று பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கான திருத்தியமைக்கப்பட்ட கலைத்திட்டங்களுக்கு புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இப்புதிய அனுமதிகள் இம்மூன்று பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முறையே பதினாறாவது மற்றும் பதினான்காவது அணிகளுக்கானவையாகும். மீளாய்வு செய்யப்பட்டக் கலைத்திட்டங்கள் கொண்ட முதுமானிப் பட்டங்களுக்குப் (SLQF 9) பதிவு செய்துகொண்ட இரண்டாவது அணி மாணவர்களுள் முறையே மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்களில் முதுமானி (MLS) பட்டத்திற்குப் பதிவு செய்த பதினைந்து மாணவர்களும், கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியலில் (CMI) முதுமானிப் பட்டத்திற்கு பதிவு செய்த ஏழு மாணவர்களும் அடங்குவர்.

மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்களில் எம்எஸ்சீ மாணவர்கள் பதினான்கு பேரும் கல மற்றும் மூலக்கூற்று நோய் எதிர்ப்பியலில் பதின்மூன்று மாணவர்களும் 2020 இல் தமது எம்எஸ்சீ ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்தனர். மொத்தம் ஏழு எம்எல்எஸ் மற்றும் ஐந்து சீஎம்ஐ எம்எஸ்சீ மாணவர்கள் 2020 ஆம் ஆண்டில் தமது ஆய்வுப் பத்திரங்களை பரிசீலனைக்குச் சமர்ப்பித்தனர். COVID-19 தொற்று காரணமாக 2020 ஏப்றில் மாதத்திலும் மீண்டும் செப்டெம்பரிலும் ஏற்பட்ட கல்விசார் செயற்பாடுகளிலான இடையூறுகள் காரணமாக ஏழு எம்எல்எஸ் மாணவர்களதும் ஐந்து சீஎம்ஐ மாணவர்களதும் ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் தாமதமுற்றன. (விபரங்களுக்கு அட்டவணை 5 மற்றும் 6 ஐ பார்க்கவும்).

2020 இல், மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்களில் எம்எஸ்சீ பட்டத்தில் மிகச் சிறந்த மாணவருக்கான பேராசிரியர் எரிக் எச் கருணாநாயக்க தங்கப் பதக்கத்தை செல்வி அமாலி ஜயவிக்கிரம பெற்றுக்கொண்டார். கல மற்றும் மூலக்கூற்று நோய் எதிர்ப்பியலில் எம்எஸ்சீ பட்டத்தில் மிகச் சிறந்த மாணவருக்கான கிளாக்சோ ஸ்மித் க்ளைன் தங்கப் பதக்கம் செல்வி ஜனித்தா இத்தகொடவிற்குக் கிடைத்தது. மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்களில் 06 பேரும் கல மற்றும் மூலக்கூற்று நோய் எதிர்ப்பியலில் (CMI) 06 பேருமாக மொத்தம் 12 மாணவர்கள் தமது முதுமானி பட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். ஒரு மாணவர் மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்களில் முதுமானிப்பட்டம் பெற்று எம்எல்எஸ் நிகழ்ச்சித் திட்டத்தை விட்டு விலகிச் செல்ல, இன்னொரு மாணவர் கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியலில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா பெற்று CMI நிகழ்ச்சித் திட்டத்தை விட்டு விலகிச் சென்றார்.

பின்வரும் பணியாள் தொகுதி உறுப்பினர்கள் கற்கை நெறி இணைப்பாளர்களாகவும் இணை/துணை இணைப்பாளர்களாகவும் தொடர்ந்தும் பணியாற்றினர்:

பேராசிரியர் ஓவீடீஎஸ்ஜே வீரசேன - கற்கை நெறி இணைப்பாளர், மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்களில் எம்எஸ்சீ



கலாநிதி சுதேஷினி ஹேவகே - துணை கற்கை நெறி இணைப்பாளர், கல மற்றும் மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்களில் எம்எஸ்சீ.

கலாநிதி சிசிர பத்திரன - கற்கை நெறி இணைப்பாளர், கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியலில் எம்எஸ்சீ.

கலாநிதி நர்மதா பெர்னாண்டோ - கற்கை நெறி துணை இணைப்பாளர், CMI இல் எம்எஸ்சீ

செல்வி ரூபிக்கா விஜேசிங்க - கற்கை நெறி இணைப்பாளர், உயிர் தகவலியலில் எம்எஸ்சீ, யுசீஎஸ்சீ

கலாநிதி ருவந்தி ரனசிங்க - கற்கை நெறி இணைப்பாளர், உயிர்தகவலியலில் எம்எஸ்சீ, ஐபீஎம்பீபீ

2020 இல் பின்வருவோர் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்களாகப் புதிதாக நியமிக்கப்பட்டனர்:

கலாநிதி சுமதி டீ சில்வா–நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர், உயிர்த்தகவலியல் முதுமானி (2021 அனுமதி)

பின்வரும் விரிவுரையாளர்கள்/ வருகைதரும் விரிவுரையாளர்கள் **மூலக்கூற்று உயிர் விஞ்ஞானத்தில் எம்எஸ்சீ** கற்கைக்கு விரிவுரை வழங்கினர்:

பேராசிரியர் எரிக் எச் கருணாநாயக்க, உயிர் இரசாயனவியலில் ஓய்வுபெற்ற பேராசிரியரும் ஐபீஎம்பீபீயின் தாபகப் பணிப்பாளரும்.

பேராசிரியர் கமனி எச் தென்னக்கோன், மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்களில் சிரேஸ்ட பேராசிரியர் ஐபீஎம்பீபீ.

பேராசிரியர் ஐரா தாப்ரூ, வருகைதரும் பேராசிரியர், ஐபீஎம்பீபீ.

பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், உயிர் இரசாயனவியலில் சிரேஸ்ட பேராசிரியர், மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் நிமால் புண்யசிரி, உயிர் இரசாயனவியலில் பேராசிரியர், ஐபீஎம்பீபீ.

பேராசிரியர் டிஎல்எஸ் திரிமானே, தாவர விஞ்ஞானத்தில் பேராசிரியர், தாவர விஞ்ஞானத் திணைக்களம், விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக் கழகம்.

பேராசிரியர் நிலந்தி தசநாயக்க. தாவரவியல் பேராசிரியர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.

பேராசிரியர் காந்த லங்காதிலக்க, சமூக மருத்துவ பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம்.

பேராசிரியர் சாலினி ஸ்ரீரங்கநாதன், மருந்தாக்கவியல் பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ஓவீடீஎஸ்ஜே வீரசேன, மூலக்கூற்று உயிரியல் பேராசிரியர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி நலிந்த சில்வா, உடற்கூற்றியலில் சிரேஸ்ட விரிவுரையாளர், மருத்துவ விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.

கலாநிதி சுமதி டீ சில்வா, சிரேஸ்ட விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி நதீஸா லெவ்கே பண்டார, சிரேஸ்ட விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி சுதேஷினி ஹேவகே, விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி சமீர சமரக்கோன், விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி ருவந்தி ரனசிங்க, விஞ்ஞான உதவியாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி நிலூப்பா குனரட்ன, விஞ்ஞான உதவியாளர், (ஐபீஎம்பீபீ).

செல்வி நிசாரா பட்டகொட, விஞ்ஞான உதவியாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி டி. சுந்தரலிங்கம், தற்காலிக உதவி விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ. (2020.10.18 வரை)

செல்வி. அஞ்சன வெலிக்கல, தற்காலிக விஞ்ஞான/ கற்பித்தல் உதவியாளர் ஐபீஎம்பீபீ. (2020.12.31 வரை)

செல்வி ஜோன் கொத்தலாவல தற்காலிக உதவி விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ (2020.12.01 முதல்)

பின்வரும் விரிவுரையாளர்கள் /வருகைதரும் விரிவுரையாளர்கள் **கல மற்றும் மூலக்கூற்று நோய் எதிர்ப்பியலில் எம்எஸ்சீ** கற்பித்தல் செயற்பாடுகளுக்குப் பங்களிப்புச் செய்தனர்:

பேராசிரியர். ஷிரோமா ஹந்துநெத்தி, பணிப்பாளர், நோய் எதிர்ப்பியல் பேராசிரியர், ஐபீஎம்பீபீ.

பேராசிரியர். கமனி எச் தென்னக்கோன், மூலக்கூற்று உயிர் விஞ்ஞானத்தில் சிரேஸ்ட பேராசிரியர், ஐபீஎம்பீபீ.

பேராசிரியர் சுனில் பிரேமவன்ச, விலங்கியல் பேராசிரியர், விலங்கியல் திணைக்களம், விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.

பேராசிரியர்.சாலினி ஸ்ரீரங்கநாதன், மருந்தாக்கவியல் பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம்.

பேராசிரியர். டிஎல்எஸ் திரிமானே, தாவர விஞ்ஞானத்தில் பேராசிரியர், தாவர விஞ்ஞானத் திணைக்களம், விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக் கழகம்.

பேராசிரியர் ஷர்மினி குணவர்தன, ஒட்டுண்ணியியல் திணைக்களம், மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ஓவீடீஎஸ்ஜே வீரசேன, மூலக்கூற்று உயிரியல் பேராசிரியர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி, இனோக்கா கொரியா சிரேஸ்ட விரிவுரையாளர் நுண்உயிரியல் திணைக்களம், மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக் கழகம்.

கலாநிதி, தனுஸ்க தசநாயக்க, நோயெதிர்ப்பியல் வைத்திய நிபுனர், போதனா வைத்தியசாலை, கண்டி.

கலாநிதி நர்மதா பெர்னாண்டோ, சிரேஸ்ட விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி, துசித்த கஜனாயக்க, முன்னாள் சிரேஸ்ட விரிவுரையாளர், ஹொரிசன் வளாகம், மாலபே,

கலாநிதி, சமித்த கினிகே, உதவி பரவுநோயியலாளர், பரவுநோயியல் திணைக்களம், சுகாதார அமைச்சு, கொழும்பு 8.

கலாநிதி, பத்திக்க ஜயரட்ன, குருதியியலாளர், தேசிய வைத்தியசாலை இலங்கை

பேராசிரியர் காந்த லங்காதிலக்க, சமூக மருத்துவ பேராசிரியர், மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.
கலாநிதி . நதீஸா லெவ்கே பண்டார, சிரேஸ்ட விரிவுரையாளர்,ஐபீஎம்பீபீ

கலாநிதி, காந்தி நானயக்கார, வைரோலொஜிஸ்ட் மற்றும் தடுப்பூசியியலாளர், மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம், கொழும்பு 8.

கலாநிதி, சிசிர பத்திரன, சிரேஸ்ட விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி. பிரீத்தி பெரேரா, முன்னாள் சிரேஸ்ட விரிவுரையாளர், பட்டப் பின்படிப்பு மருத்துவ நிறுவகம், கொழும்பு 8.

கலாநிதி, ரஜீவ டீ சில்வா, நோயெதிர்ப்பியல் வைத்திய ஆலோசகர், .மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம், கொழும்பு 8

கலாநிதி, தர்ஸன் டீ சில்வா, சிரேஸ்ட விரிவுரையாளர், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகம், ரத்மலான.

கலாநிதி. சுமதி டீ சில்வா, சிரேஸ்ட விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி, சுஜீவ வீரசிங்க, புற்றுநோய் வைத்திய நிபுனர், தேசிய புற்றுநோய் நிறுவகம், மகரகம.

கலாநிதி சனத் சேனாநாயக்க, ஒட்டுண்ணியியல் திணைக்களம், மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

கலாநிதி வசுந்தரா பெர்னாண்டோ, கலாநிதிப் பட்டத்திற்குப் பின்னரான ஆய்வாளர், மருத்துவ பீடம், டல்ஹவுசி பல்கலைக்கழகம், கனடா.

கலாநிதி ஜூட் ஜயமக, வைரசுவியல் விசேட நிபுணர், மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம், கொழும்பு 08.

திரு ஜேம்ஸ் தம்பிராஜா, உதவி வரிவுரைாளர், ஐபீஎம்பீபீ,(2020.02.24 முதல்)

செல்வி ஜயனி காரியவசம், கற்பித்தல் உதவியாளர், ஐபீஎம்பீபீ(2020.12.26 வரை)

.

பின்வரும் விரிவுரையாளர்கள் /வருகைதரும் விரிவுரையாளர்கள் **உயிர்த் தகவலியலில் எம்எஸ்சீ** கற்கைக்கு விரிவுரை வழங்கினர்:

கலாநிதி, ருவன் வீரசிங்க – சிரேஷ்ட விரிவுரையாளர், யூசீஎஸ்சீ

பேராசிரியர். கமனி எச் தென்னக்கோன், மூலக்கூற்று உயிர் விஞ்ஞானத்தில் சிரேஸ்ட பேராசிரியர், ஐபீஎம்பீபீ.

பேராசிரியர். ஏரிக் எச். கருனாநாயக்க – உயிர்இரசாயனவியல் ஓய்வுநிலை பேராசிரியர், ஸ்தாபக பணிப்பாளர், ஐபீஎம்பீபீ.

பேராசிரியர். எரிக் பொங்காம் ரடோல்ப், உயிர்த் தகவலியல் பேராசிரியர், சுவீடிஷ் விவசாய விஞ்ஞான பல்கலைக் கழகம், சுவீடன்.

பேராசிரியர் எமிலியானோ பெரட்டோ-ஹேர்னாண்டஸ் -கௌரவ பேராசிரியர், கொலம்பிய தேசிய பல்கலைக்கழகம், கொலம்பியா.

கலாநிதி ஜோஸ் ஆர். வல்வேடே- தலைவர், விஞ்ஞானபூர் கணிப்பீட்டுச் சேவை, உயிர் இரசாயனவியலுக்கான தேசிய நிலையம், ஸ்பெயின்.

பேராசிரியர், நிமல் புண்யசிரி -உயிர் இரசாயனவியலில் பேராசிரியர், ஐபீஎம்பீபீ.

பேராசிரியர் ஓவீடீஎஸ்ஜே வீரசேன -மூலக்கூற்று உயிரியல் போராசரியர், ஐபீஎம்பீபீ

கலாநிதி நலின் வீரசிங்க – சிரேஷ்ட விரிவுரையாளர், யுசீஎஸ்சீ

செல்வி ரூப்பிக்கா விஜேசிங்க - சிரேஷ்ட விரிவுரையாளர், யுசீஎஸ்சீ

கலாநிதி. ஹசேந்ர கத்திரிஆராச்சி – சிரேஷ்ட விரிவுரையாளர், தாவர விஞ்ஞானத் திணைக்களம், கொழும்பு பல்கலைக் கழகம்.

கலாநிதி. சமீர விஸ்வகுல- சிரேஷ்ட விரிவுரையாளர், புள்ளிவிபரத் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம்.

கலாநிதி. ரசீக்க ஜயதிலக்க --சிரேஷ்ட விரிவுரையாளர், புள்ளிவிபரத் திணைக்களம், கொழும்பு பல்கலைக் கழகம்.

கலாநிதி. சுமதி டீ சில்வா -சிரேஸ்ட விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி . சுதேஷினி ஹேவகே,- விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ

கலாநிதி .எஸ்எஸ்ஆர் சமரக்கோண், - விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி . ருவந்தி ரனசிங்க- விஞ்ஞான உதவியாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி மேரன் எதிரிவீர, கலாநிதி பட்டத்திற்குப் பின்னரான ஆராய்ச்சி விஞ்ஞானி, ஜேஜு தேசியப பல்கலைக்கழகம், கொரிய குடியரசு.

கலாநிதி . கனிஷ்க சேனாதிலக்க - கலாநிதி பட்டத்திற்குப் பின்னரான ஆராய்ச்சி விஞ்ஞானீ, ஐபீஎம்பீபீ

திரு. காஞ்சன சேனநாயக்க – உதவி வலையமைப்பு முகாமையாளர், ஐபீஎம்பீபீ

செல்வி நிஷாரோ பட்டகொட, விஞ்ஞான உதவியாளர், ஐபீஎம்பீபீ.

செல்வி. லக்சிக்கா ஜயசேக்கர, ஆராய்ச்சி உதவியாளர், ஐபீஎம்பீபீ

செல்வி அமாலி பெர்னாண்டோ – விஞ்ஞான/கற்பித்தல் உதவியாளர், ஐபீஎம்பீபீ

எம்எஸ்சீ கலைத்திட்டம், உபவிதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றின் மீளாய்வு

மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்கள், கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல் மற்றும் உயிர் தகவலியல் ஆகிய மூன்று கற்றை நெறிகளினதும் கலைத்திட்டங்களை சம்பந்தப்பட்ட கற்கைச் சபைகளினால் மீளாய்வு செய்தல் 2017 இல் பூர்த்தி செய்யப்பட்டு, 2018 இல் மேலவையினால் அதன் 430வது கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. திருத்தப்பட்ட துணைச் சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் 2018 இல் பேரவை அங்கீகாரததிற்காக சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வு செய்யப்பட்ட துணை விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான பேரவை அங்கீகாரம் 2019 ஒக்டோபர் மாதம் கிடைக்கப்பெற்றது.

இம்மூன்று திருத்தப்பட்ட/மீள்கட்டமைக்கப்பட்ட கலைத்திட்டங்களின் அங்கீகாரத்திற்கான விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட்டு, முகாமைத்துவ சயினால் அங்கீகரிக்கப்பட்டு 2020 டிசெம்பர் மாதம் மேலவை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது.

கல்விக் குழு – 2020

பேராசிரியர்.ஷிரோமா ஹந்துநெத்தி, (பணிப்பாளர் & தலைவர்) நோய் எதிர்ப்பியல் பேராசிரியர் தலைவர், BOS-CMI

பேராசிரியர்.எரிக் எச் கருணாநாயக்க, உயிர் இரசாயனவியலில் ஓய்வுபெற்ற பேராசிரியர் ஐபீஎம்பீபீ.

பேராசிரியர் ஐரா தாப்ரூ - வருகைதரு பேராசிரியர், ஐபீஎம்பீபீ (2020 ஜூலை வரை)

பேராசிரியர். கமனி எச் தென்னக்கோண் - மூலக்கூற்று உயிர் விஞ்ஞானத்தில் சிரேஸ்ட பேராசிரியர், தலைவர், BOS-MLS, IBMBB

பேராசிரியர் எஸ். தெரணியகல, சேதன இரசாயனவில் சிரேஷ்ட பேராசரியர், இரசாயனவியல் திணைக்களம், விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ஓவீடீஎஸ்டீஜே வீரசேன - நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர், BOS-MLS, மூலக்கூற்று உயிரியல் பேராசிரியர், ஐபீஎம்பீபீ.

பேராசிரியர், நிமால் புண்யசிரி - உயிர் இரசாயனவியலில் பேராசிரியர், ஐபீஎம்பீபீ.

பேராசிரியர் சுலோசனா விஜேசுந்தர, உயிர் இரசாயனவில் பேராசரியர், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் திணைக்களம், மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

பேராசிரயர் கித்மினி சிறிதேவ, தலைவர்/ உயிர் இரசாயனவியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல் திணைக்களம், மருத்துவ பீடம், கொ.ப.க.

பேராசிரியர் சுனில் பிரேமவன்ச – ஓய்வுநிலை பேராசிரியர், கொபக

கலாநிதி. இனோக்கா கொரியா, சிரேஸ்ட விரிவுரையாளர், நுண்உயிரியல் திணைக்களம், கொபக

கலாநிதி. ருவான் வீரசிங்க, தலைவர், BOS-BI , சிரேஷ்ட விரிவுரையாளர், யுசிஎஸ்சி, கொபக

கலாநிதி. சிசிர பத்திரன, நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர், CMI, சிரேஸ்ட விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி. ருவந்தி ரனசிங்க, இணை ஒருங்கிணைப்பாளர் BOS-BI; சிரேஷ்ட –விஞ்ஞான உதவியாளர், ஐபீஎம்பீபீ.

செல்வி. ரூப்பிக்கா விஜேசிங்க, இணை ஒருங்கிணைப்பாளர் BOS-BI; சிரேஷ்ட விரிவுரையாளர், யுசிஎஸ்சி, கொபக

கலாநிதி. சுமதி டீ சில்வா, சிரேஸ்ட விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ. (செயலாளர்)

கலாநிதி. நர்மதா பெணான்டோ, உதவி நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் CMI; சிரேஸ்ட விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ. (செயலாளர்)

கலாநிதி. சுதேஷினி ஹேவகே, உதவி நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் MLS; விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி, ரஜீவ டீ சில்வா, நோயெதிர்ப்பியல் வைத்திய நிபுனர்,நோய் எதிரிப்பியல் திணைக்களம், மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம்

கலாநிதி நலிந்த சில்வா, சிரேஸ்ட விரிவுரையாளர், உடற்கூற்றியல் திணைக்களம், மருத்துவ விஞ்ஞான பீடம், ஸ்ரீஜப (2020 செப்டெம்பர் 29 முதல்)

கலாநிதி . நதீஸா லெவ்கே பண்டார, உதவி நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் MLS, சிரேஸ்ட விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ (2020 மார்ச் 05 முதல்)

ஆய்வுச் சபை - மூலக்கூற்று உயிர் விஞ்ஞானம்:

பேராசிரியர். கமனி எச் தென்னக்கோன் - மூலக்கூற்று உயிர் விஞ்ஞானத்தில் சிரேஸ்ட பேராசிரியர்,(தலைவர்)

பேராசிரியர்.எரிக் எச் கருணாநாயக்க, உயிர் இரசாயனவியலில் ஓய்வுபெற்ற பேராசிரியர் ஐபீஎம்பீபீ.

பேராசிரியர், நிமால் புண்யசிரி -உயிர் இரசாயனவியலில் பேராசிரியர்,ஐபீஎம்பீபீ.

பேராசிரியர் ஐரா தாப்ரூ - வருகைதரு பேராசிரியர், ஐபீஎம்பீபீ

பேராசிரியர் ஜகத்பிரிய வீரசேன - மூலக்கூற்று உயிரியல் பேராசிரியர், ஐபீஎம்பீபீ (ஒருங்கிணைப்பாளர்)

பேராசிரியர்.நிலந்தி தசநாயக்க – தாவரவியல் பேராசிரியர், ஸ்ரீஜபக

கலாநிதி. சுமதி டீ சில்வா, சிரேஸ்ட விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி. நதீஷா லெவ்கே பண்டார - சிரேஸ்ட விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி. சுதேஷினி ஹேவகே - விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ. (உதவி ஒருங்கிணைப்பாளர்)
கலாநிதி. சமீர சமரக்கோண் - விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி. ருவந்தி ரனசிங்க –விஞ்ஞான உதவியாளர், ஐபீஎம்பீபீ.

ஆய்வுச் சபை - கல மற்றும் மூலக்கூற்று நோய் எதிர்ப்பியல்:

பேராசிரியர்.ஷிரோமா ஹந்துநெத்தி, நோய் எதிர்ப்பியல் பேராசிரியர் (தலைவர்)

பேராசிரியர் சுனில் பிரேமவன்ச - விலங்கியல் பேராசிரியர், விஞ்ஞான பீடம் கொபக

கலாநிதி. சிசிர லால் பத்திரன -சிரேஸ்ட விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

கலாநிதி. நர்மதா பெணான்டோ - சிரேஸ்ட விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ. (செயலாளர்)

கலாநிதி. இனோக்கா கொரியா, சிரேஸ்ட விரிவுரையாளர், நுண்உயிரியல் திணைக்களம், கொபக

கலாநிதி, ரஜீவ டீ சில்வா,நோயெதிர்ப்பியல் வைத்திய நிபுனர்,நோய் எதிரிப்பியல் திணைக்களம்,MRI



பேராசிரியர். ஓவீடீஎஸ்ஜே வீரசேன - மூலக்கூற்று உயிரியல் பேரசிரியர், ஐபீஎம்பீபீ

கலாநிதி, தனுஷ்க்க தசநாயக்க- நோயெதிர்ப்பியல் வைத்திய நிபுனர், தேசிய வைத்தியசாலை, கண்டி

கலாநிதி தர்ஷன் டீ சில்வா - சிரேஸ்ட விரிவுரையாளர், சர் ஜோன் கொத்தாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

திரு. ஜேம்ஸ் தம்பிராஜா - உதவி விரிவுரையாளர், ஐபீஎம்பீபீ.

செல்வி. ஜயனி காரியவசம்- கற்பித்தல் உதவியாளர், ஐபீஎம்பீபீ. (அழைப்பின்பேரில்)

செல்வி தக்ஷிக்கா கங்கானி – விஞ்ஞான உதவியாளர், ஐபீஎம்பீபீ. (அழைப்பின்பேரில்)

ஆய்வுச் சபை - உயிர்த் தகவலியல்:

கலாநிதி. ருவான் வீரசிங்க– சிரேஷ்ட விரிவுரையாளர், யுசிஎஸ்சி (தலைவர்)

பேராசிரியர்.கமனி எச் தென்னக்கோண் - மூலக்கூற்று உயிர் விஞ்ஞானத்தில் சிரேஸ்ட பேராசிரியர் (பிரதி தலைவர்)

பேராசிரியர். ஷிரோமா ஹந்துநெத்தி, பணிப்பாளர் - ஐபீஎம்பீபீ (பதவிவழி உறுப்பினர்.)

பேராசிரியர். கேபீ ஹேவகமகே – பணிப்பாளர்- யுசிஎஸ்சி. (பதவிவழி உறுப்பினர்)

பேராசிரியர். எரிக் எச் கருணாநாயக்க - உயிர் இரசாயனவியலில் ஓய்வுபெற்ற பேராசிரியர் ஐபீஎம்பீபீ.

பேராசிரியர் ஓவீடீஎஸ்ஜே வீரசேன - மூலக்கூற்று உயிரியல் பேராசிரியர், ஐபீஎம்பீபீ

கலாநிதி. நலின் ரனசிங்க –சிரேஷ்ட விரிவுரையாளர், யுசிஎஸ்சி
கலாநிதி. எம் டி ரி ஆட்டிகல- சிரேஷ்ட விரிவுரையாளர், புள்ளிவிபரத் திணைக்களம், கொபக

கலாநிதி. எச் எஸ் கத்திரிஆராச்சி- சிரேஷ்ட விரிவுரையாளர், தாவர விஞ்ஞானத் திணைக்களம், கொபக

கலாநிதி. சமீர விஸ்வகுல - சிரேஷ்ட விரிவுரையாளர், புள்ளிவிபரத் திணைக்களம், கொபக

செல்வி. ரூப்பிக்கா விஜேசிங்க – சிரேஷ்ட விரிவுரையாளர் (இணைஇணைப்பாளர் -யுசிஎஸ்சி)

கலாநிதி. ருவந்தி ரனசிங்க- விஞ்ஞான உதவியாளர் (இணைஇணைப்பாளர் -ஐபீஎம்பீபீ மற்றும் செயலாளர்)

திரு. காஞ்சன எஸ் சேனநாயக்க – முன்னாள் இணைஇணைப்பாளர் ஐபீஎம்பீபீ (அழைப்பிற்கமைவாக)

குறுங்கால கற்கை நெறிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்:

2020 ஆண்டு நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த இரண்டு குறுங்கால கற்கைநெறிகள், அதாவது மூலக்கூற்று உயிரியல் நுட்பங்கள் மற்றும் கல வளர்ச்சி நுட்பங்கள் தொடர்பான கற்கைநெறிகள் செயற்பாடுகளிலான இடையூறுகள் காரணமாக 2021 இல் நடத்த மீள் திட்டமிடப்பட்டது.

2020 டிசெம்பரில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நோயெதிர்ப்பியலில் உயர்தர சான்றிதழ் கற்கை நெறியும் 2021 மார்ச் மாதம் நடத்த மீள்திட்டமிடப்பட்டது.

i)செயன்முறை செய்துகாட்டல்: இலண்டன் பல்கலைக்கழக கல்லூரி (UCL) 2020 மார்ச் 10

கலாநிதி சுமதி டீ சில்வாவும் செல்வி தர்மினி சந்தரலிங்கமும் கட்டுப்படுத்தல் உட்சுரப்பி சமிபாடு என்ற தலைப்பில் 2020 மார்ச் 20 ஆம் திகதி 09 பட்டதாரி மாணவர்களுக்கு ஒரு நாள் செயன்முறை செய்துகாட்டலை நடத்தினர்.

ii)மரபணு சீக்குவென்சிங் பற்றிய செய்துகாட்டல்

கலாநிதி ருவந்தி ரனசிங்க, செல்வி ஜோன் கொத்தலாவல மற்றும் செல்வி அஞ்சன வெலிக்கல ஆகியோர் 2020 ஜனவரி 17 ஆம் திகதி இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தில் மரபணு சீக்குவென்சிங் தொடர்பாக 3ஆம் வருட உயிர் தொழில்நுட்பவியல் சிறப்பு மாணவர்களுக்கு (16 மாணவர் அடங்கிய அணி) ஒரு நாள் செயன்முறை செய்துகாட்டலொன்றை நடத்தினர்.

iii)உண்மை நேர பிசீஆர் தொடர்பான செய்துகாட்டல்

கலாநிதி நிலுப்பா குணரத்ன 2020 ஜனவரி 17 ஆம் திகதி உண்மை நேர பிசீஆர் தொடர்பாக இலங்கை வயம்பப் பல்கலைக்கழகத்திலிருந்து வந்து பங்குபற்றிய பட்டதாரி மாணவர்களுக்கு செயன்முறை செய்து காட்டலொன்றை நடத்தினர்.

iv)கைத்தொழில் பயிற்சி

செல்வி எம்.என். பாரா நிப்லா (வயம்ப பல்கலைக்கழக பட்டதாரி மாணவி) பேராசிரியர் ஓவீடீஎஸ்ஜே வீரசேனவின் மேற்பார்வையின்கீழ் 3 மாத பொறித்தள பயிற்சியை நிறைவு செய்தார்.

v)தனியொரு மூலக்கூற்று ஒப்டிக்கல் பார்கோட்களைப் பயன்படுத்தி ஒரே நேரத்தில் மல்ட்டிபிலெக்ஸ்ட்(800-ப்ளெக்சிற்கு) mRNA, புரதம் மற்றும் மரபணு ஆகியவற்றைக் கண்டுபிடித்தல் தொடர்பான கருத்தரங்கு

தனியொரு மூலக்கூற்று ஒப்டிக்கல் பார்கோட்களைப் பயன்படுத்தி ஒரே நேரத்தில் மல்ட்டிபிலெக்ஸ்ட்(800-பளெக்சிற்கு) mRNA, புரதம் மற்றும் மரபணு ஆகியவற்றைக் கண்டுபிடித்தல் தொடர்பான கருத்தரங்கு 2020 ஜனவரி 27 ஆம் திகதி உயிர்இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர்தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் நடத்தப்பட்டது.

பட்டப்பின்படிப்பு பட்டமளிப்பு விழா 2020

பட்டப் பின்படிப்புப் பட்டங்கள் 2020 டிசெம்பர் 31 ஆம் திகதி வழங்கப்பட்டன. 2020 ஆம் ஆண்டின் காலிறுதிப் பகுதியில் ஏற்பட்ட COVID -19 தொற்று காரணமாக சமூக நிகழ்வுகள்மீது விதிக்கப்பட்ட சுகாதாரக் கட்டுப்பாடுகள் காரணமாக வைபவரீதியான பட்டமளிப்பு விழா நடத்தப்படவில்லை. இவ்வைபவ ரீதியான நிகழ்வு 2021 பெப்ரவரியில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இணையவழி திறந்த தினம்: 2020 ஒக்டோபர் 9

COVID-19 தொற்று தொடர்பான சுகாதாரக் கட்டுப்பாடுகள் காரணமாக கள செயற்பாடுகளுள் பெரும்பாலானவை சாத்தியமற்றதானதால், இணையவழி திறந்த தின நிகழ்ச்சி ஒன்று திட்டமிடப்பட்டது. எனவே, இணையவழி திறந்த தின நிகழ்ச்சி ஒன்று 2020 ஒக்டோபர் 9 ஆம் திகதி நடத்தப்பட்டது.

இது ஐபீஎம்பீபீ யினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு வெற்றிகரமான நிகழ்வாக அமைந்தது. அரச பல்கலைக்கழகங்கள் மற்றம் தனியார் துறை நிறுவகங்கள் ஆகியவற்றிலிருந்து விஞ்ஞானப் பிரிவு பட்டதாரி மாணவர்கள் மற்றும் பட்டப்பின்படிப்பு மாணவர்கள் மற்றும் பாடசாலை ˙படிப்பை முடித்தவர்கள் அடங்கலாக மொத்தம் 60 பங்குபற்றுநர்கள் ஐபீஎம்பீபீ இல் நடைபெறும் எம்எஸ்சீ, எம்பில்/பிஎச்டீ நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய குறுகிய பயிற்சிநெறிகள் ஆகியன பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொளளக்கூடியதாக இருந்தது.

இந்நிகழ்ச்சித்திட்டம் கற்கைநெறி விபரங்கள், இணையவழி ஆய்வுகூட சுற்றுலாக்கள், முற்பதிவு, ஐபீஎம்பீபீ இல் நடத்தப்படும்/ உள்ள கற்கைநெறிகள் பற்றி பணியாளர்கள் மற்றும் சிரேஷ்ட மாணவர்கள் ஆகியோருடனான ஆலோசனை/ கலந்துரையாடல்கள் ஆகியவற்றை உள்ளடகியிருந்தது. மொத்தம் 39 விண்ணப்பதாரிகள் திறந்த தினத்தில் வழங்கப்பட்ட 50% கழிவில் (விண்ணப்பப் படிவ கட்டணத்தின்) எம்எஸ்சீ விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொண்டனர்.

ஐபீஎம்பீபீ இல் முதுமானி கற்கைநெறிகளுக்காக பதிவு செய்துகொண்ட மாணவர்களுக்கு சலுகை அடிப்படையிலான மாணவர் கடன் திட்டம் இலங்கை வங்கி மற்றும் சம்பத் வங்கி ஆகியவற்றினால் திறந்த தினத்தின்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



ஆய்வுச் செயற்பாடுகள்:

அயன மண்டல, ஒட்டுண்ணி மற்றும் தொற்று நோய்கள் (யானைக்கால் நோய், எலிக்காய்ச்சல், டெங்கு, மலேரியா, Melioidosis, Nentode தொற்று மற்றும் சாஸ் Cov 2) மூலக்கூற்று மருத்துவம் (புற்றுநோய் மற்றும் புற்றுநோய் மூலக் கலங்கள், மானுட மரபணு வேறுபாடு, மற்றும் பண்டைய மரபணு ஆய்வுகள், குள்ளதனமான தோற்றம் தொடர்பான மூலக்கூற்று ரீதியான ஆய்வுகள், மெற்றாபொலிக் நோய்கள் தொடர்பான மூலக்கூற்று ஆய்வுகள், Cytomegolovirous மரபணுவியல், ஒவ்வாப் பதார்த்தத்தை இனங்காணல் மற்றும் வகைப்படுத்தல் தொடர்பான மூலக்கூற்று ஆய்வுகள், தாவர மூலக்கூற்று உயிரியல், மெற்றாபொலிமிக்ஸ், நுண்ணுயிரிகளின் உயிர் இரசாயனவியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல், மருத்துவத் தாவரங்கள் (வீக்க எதிர்ப்பு, மற்றும் நோயெதிர்ப்பு, ஒவ்வாமை எதிர்ப்பு தன்மைகள், மருத்துவத் தாவரங்களின் புற்றநோய் எதிர் குணங்கள், ஒரு பிரதேசத்திற்கே உரிய தெரிவு செய்யப்பபட்ட மற்றும் மருத்துவ தாவரங்களின் யானைக்கால் நோய் எதிர்ப்புச் செயற்பாடு), கைத்தொழில் பிரயோகம் மற்றும் விலங்கினங்களை மூலக்கூற்று ரீதியான இனங்காணல் ஆகிய துறைகளில் பல ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஐபீஎம்பீபீ யில் நடைபெற்றன. இவ் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் ஒவ்வொன்றும் இந் நிறுவகத்தின் பணிப்பாளர், கல்வி சார் உத்தியோகத்தர்கள், மற்றும் கல்வி சார் உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் இணை விஞ்ஞானிகள் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் எம்பில்/பிஎச்டி மற்றும் எம்எஸ்சி மாணவர்களுக்கு ஆராய்ச்சி பயிற்சிகளையும் வழங்குகின்ற பல்வேறுபட்ட கருத்திட்டங்களைக் கொண்டிக்கின்றது. மாணவர்கள், ஆராய்ச்சி கருத்திட்டங்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் விபரங்கள் அட்டவணை 1 மற்றும் 2 இல் நிரற்படுத்தப்பட்டுள்ளன.

ஒத்த துறையில் திறன்கொண்ட குழுவினரால் மீளாய்வு செய்யப்பட்ட சர்வதேச சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட முழுமையான ஆராய்ச்சிப் பத்திரங்கள் மொத்தமாக 26 காணப்பட்டன. சர்வதேச ஆராய்ச்சி சுருக்கப் பத்திரங்கள் அடங்கலாக மொத்தம் 15 ஆராய்ச்சி வெளியீடுகள் விஞ்ஞான அமர்வுகளில் முன்வைக்கப்பட்டன.

கல்விசார் பணியாளர்கள்/ஆராய்ச்சி ஒத்துழைப்பாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிகள் பற்றிய விபரம் அட்டவணை 3 இல் தரப்பட்டுள்ளது.

1) ஒட்டுண்ணி மூலமான மற்றும் தொற்று நோய்கள் தொடர்பான ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

ஒட்டுண்ணிகளால் பரவும் நோய்களும் தொற்று நோய்களும் இலங்கை மக்களின் நோய் சுமைக்கு இன்னமும் கணிசமாள அனவு காரணமாக அமைகின்றன. உயிர் கொல்லி நோயாக இல்லாவிட்டாலும் நீண்ட காலமாக நிலவிவரும் நிணநீர் ஆணைக்கால் நோய் கணிசமானளவு துன்பத்தை ஏற்படுத்துவதோடு, அதற்கான சிகிச்சை மட்டுப்படுத்தபபட்டதாகவே உள்ளது. லெப்டோஸ்பிரோசிஸ் (எலிக் காய்ச்சல்) மற்றும் டெங்குக் காய்ச்சல் ஆகியன அண்மைக்காலத்தில் மிக ஆபத்தான அளவில் அதிகரித்துக் காணப்படுவதோடு, இவ்விரு நோய்களும் பெருமளவு நோய்த் தாக்கத்தையும் மரணங்களையும் ஏற்படுத்துவனவாகவும் உள்ளன. காலம் தாழ்த்தி நோயை இனம் காணுதலும் நோய் நடைமுறைக்கு அடிப்படையாய் அமைந்த பொறிமுறை பற்றிய அறிவின்மையும் இவ்விரு நோய்களாலும் ஏற்படும் அதிக எண்ணிக்கையிலான மரணங்களுக்குக் காரணமாகும். இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பல ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளன. மலேரியா நோய் பரவல் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும், மீண்டும் ஏற்படுதலானது தேசிய மலேரியா எதிர்ப் பிராச்சார நிகழ்ச்சித்திட்டத்தினால் தடுக்கப்படும் அதேவேளை, இக்கட்டத்தில் உணர்பூர்வ மூலக்கூற்று முறைமைகள் தாபிக்கப்படுதலும் வேண்டும்.

அ) யானைக்கால் நோய்.

2020 இல் ஒரு கருத்திட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

i) சாத்தியமாகக்கூடிய மருந்து இலக்குகளை இனங்காண்பதற்காக புதிய தலைமுறை சிக்குவின்சின் தொழில்நுட்பங்களைப்(NGS) பயன்படுத்தி *செட்டேரியா டிஜிடாட்டாவின்* மரபணுக்கள் தொடர்பான ஆய்வுகள்

செட்டேரியா டிஜிடாட்டாவின் சிக்குவின்ஸ் தரவுகளைப் பயன்படுத்தி சாத்தியமான மருந்து இலக்குகளை இனங்காண்பதை நோக்கமாகக்கொண்டது.

ஆய்வாளர்கள்: பேராசிரியர் எரிக் பொங்காம்- ரடோல்ப் (சுவீடன் உப்சலா பல்கலைக்கழகம்) போராசிரியர் எரிக்.கருனாநாயக்க (ஐபீஎம்பீபீ), மற்றும் பேராசிரியர் கமனி எச். தென்னக்கோன் (ஐபீஎம்பீபீ)
எம்பில் / பிஎச்டீ மாணவர்/ ஐபீஎம்பீபீ: திரு. காஞ்சன எஸ் சேனாநாயக்க

நிதியளிப்பு: சுவீடிஷ் லிங்க்ஸ் கிராண்ட்
எம்பில்/பிஎச்டீ கருத்திட்டம் 2020 இல் நடைபெற்று வந்தது.

2020 இல் ஒரு முழுமையான பத்திரம் வெளியிடப்பட்டது.

ஆ) லெப்ட்டோஸ்பிரோசிஸ் (எலிக்காய்ச்சல்)

ஒரு எம்பில்/பிஎச்டீ கருத்திட்டமும் இரண்டு எம்எஸ்சீ கருத்திட்டங்களும் 2020 இல் பூர்த்தி செய்யப்பட்டன. இரண்டு எம்பில் மாணவர்கள் தமது கற்கையை இடைநிறுத்திக்கொண்டனர். ஒரு ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் கலாநிதிப் பட்டத்திற்குப் பின்னரான ஆய்வாளர் ஒருவரினால் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

i)இலங்கையின் கொழும்பு மாவட்டத்தில் மானுட லெப்டோபிரோஸிஸ்இன் சீரோ தொற்றுநோயியல்

நோய் இனங்காணல் மற்றும் ஏனைய பரவு நோயியல் அளவுகளுக்காக MAT இல் பயன்படுத்தப்படும் வெட்டுப் புள்ளி நோயெதிர்ப்பு ரிட்டர்களை வழங்கக்கூடியதாக கொழும்பு மாவட்ட வதிவாளர்களின் நோயெதிர்ப்பு நிலைமையை விபரித்தலை நோக்கமாகக் கொண்டது.

ஆய்வாளர்கள்: பிரதான ஆராய்ச்சியாளர் : பேராசிரியர் சேனக்க ராஜபக்ஷ (கொபக), பேராசிரியர் தீப்பிகா பெர்னாண்டோ மற்றும் பேராசிரியர் ஷிரோமா ஹந்துநெத்தி (ஐபீஎம்பீபீ). ஒத்துழைப்பாளர்: கலாநிதி லிலானி கருனாநாயக்க (மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம்).
எம்பில்/பிஎச்டீ மாணவர்/ஐபீஎம்பீபீ: திரு. கிருஷான் பாலாஜி (2020 இல் எம்பில் கற்கையை இடைநிறுத்திக்கொண்டார்)

நிதியளிப்பு: பேராசிரியர் சேனக்க ராஜபக்ஷவிற்கு கொழும்பு பல்கலைக் கழகத்தினால் (கொ.ப. மானியம்: AP/3/2/2014/RG/14)
2020 இல் PLOS புறக்கனிக்கப்பட்ட நோய்களில் ஒரு பத்திரம் சமர்ப்பிக்கபடவும், வேறு இரண்டு கையெழுத்துப் பிரதிகள் வெளியிடலுக்காக தயாரிக்கப்படவும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது.

ii)வெவ்வேறு நோய்த்தீவிரத் தன்மைகொண்ட எலிக்காய்ச்சல் நோயாளரிடமிருந்து பெறப்பட்ட லெப்டோஸ்பிராக்களின் ஜீனோடைப் மற்றும் சீரோடைப்களைக் கண்டறிதல்

எலிக்காய்ச்சல் நோயாளரிடமிருந்து பெறப்பட்ட லெப்டோஸ்பிராக்களின் ஜீனோடைப் மற்றும் செரோடைப்களைக் கண்டறிவதையும் நோயின் கடுமையோடு அதன் தொடர்பை ஆராய்வதையும் நோக்காகக் கொண்டது.

ஆய்வாளர்: பிரதான ஆராய்ச்சியாளர் : பேராசிரியர் ஷிரோமா ஹந்துநெத்தி (ஐபீஎம்பீபீ), கலாநிதி ஜகத்பிரிய வீரசேன, பேராசிரியர். சுனில் பிரேமவன்ச (கொபக), பேராசிரியர் சேனக்க ராஜபக்ஷ (கொபக), கலாநிதி லிலானி கருணாநாயக்க (மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம்)

எம்பில்/ பிஎச்டீ மாணவர்/ஐபீஎம்பீபீ: செல்வி நதீமா எஸ். சந்திராபத்மா (2020 மே மாதம் கற்கையை இடைநிறுத்திக்கொண்டார்)

நிதியளிப்பு: பேராசிரியர் ஷிரோமா ஹந்துநெத்தி (ஐபீஎம்பீபீ) வுக்கு தேசிய விஞ்ஞான பேரவை (என்ஆர்சீ -17- 098)

2020 மே மாதம் வரை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்று வந்து, COVID -19 தொற்று காரணமாக நிறுத்தப்பட்டது. இவ்வாராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் 2020 டிசெம்பரில் ஐபீஎம்பீபீ க்கு நியமிக்கப்பட்ட கலாநதிப் பட்டத்திற்குப் பின்னரான ஒரு ஆய்வாளரான கலாநிதி ஹரிந்திர சத்குமாரவினால் நடத்தப்படுகிறது.

iii)இலங்கையில் எலிக்காய்ச்சலில் மிகவும் பரவலாக காணப்படும் தெரிவு செய்யப்பட்ட சீரோவார்களின்/சீரோகுழுக்களின் எலிக்காய்ச்சல் எதிரியாக்கிகளை இனங்காண்பதற்கான ஓரின (Monoclonal) பிறபொருள் எதிரிகளின் உற்பத்தி

எலிக்காய்ச்சல் எதிரியாக்கிகள் எலிக்காய்ச்சல் எதிரியாக்கிகளுக்கு எதிரான நோயெதிர்ப்பு செயற்பாடுகள் ஆகியவற்றின் தன்மைகனை விளக்குவதையும் எலிக்காய்ச்சல் (கிருமிகளை) கண்டறியும் பரிசோதனையை விருத்தி செய்யும் இறுதி இலக்கோடு எலிக்காய்ச்சல் எதிரியாக்கிகளுக்கு எதிரான ஓரின பிறபொருளெதிரிகளை உற்பத்தி செய்வதையும் இலக்காகக் கொண்டது.

ஆய்வாளர்கள்: பிரதான ஆய்வாளர் : பேராசிரியர் ஷிரோமா ஹந்துநெத்தி (ஐபீஎம்பீபீ), பேராசிரியர் சேனக்க ராஜபக்ஷ(கொபக), பேராசிரியர் சுனில் பிரேமவன்ச (கொபக)மற்றும் கலாநிதி நர்மதா பெர்னாண்டோ (ஐபீஎம்பீபீ)

ஒத்துழைப்பாளர்: கலாநிதி லிலானி கருணாநாயக்க(மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம்).

எம்பில்/ பிஎச்டீ மாணவர்/ஐபீஎம்பீபீ: செல்வி தக்ஷிக்கா கங்கானி.

நிதியளிப்பு: பேராசிரியர் ஷிரோமா ஹந்துநெத்தி, ஐபிஎம்பீபீ யிற்கு மரபணு என்ஜினியரிங் மற்றும் உயிர்தொழில்நுட்பத்திற்கான சர்வதேச நிலையம் (ICGEB-LKA-17-1)

ஒரு எம்பில்/ பிஎச்டீ நிகழ்ச்சித்திட்டம் 2020 இல் நடைபெற்று வந்தது. ஒரு சுருக்கப் பிரதி AISSL இன் ஈராண்டிற்கொரு முறையான விஞ்ஞான கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட்டது.

iv)எலிக்காய்ச்சல் எதிரியாக்கிகளை கொண்டு தடுப்பூசி போட்டதைத் தொடர்ந்து பெரிடோனியல் லிம்போசைட் சப்பொப்யூலேஷன்களில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் எலிகளில் பிறபொருளெதிரிகளின் செயற்பாடு பற்றிய ஆரம்ப ஆய்வு

எலிக்காய்ச்சல் கிருமிகளைக்கொண்டு எலி இன்டறாபெரிடோனியல் தடுப்பூசி போட்டதைத் தொடர்ந்து நோயெதிர்பபு செயற்பாடுகளை ஏற்படுத்தும் லிம்போசைட் சப்பொப்யூலேஷன்களை ஆராயும் நோக்கம் கொண்டது.

ஆய்வாளர்கள்: பிரதான ஆய்வாளர் : பேராசிரியர் ஷிரோமா ஹந்துநெத்தி (IBMBB), பேராசிரியர் சுனில் பிரேமவன்ச (கொபக) மற்றும் கலாநிதி ரஜிவ டீ சில்வா (வைத்திய ஆராய்ச்சி நிறுவனம்)

எம்எஸ்சீ மாணவர்/ஐபீஎம்பீபீ: செல்வி டீடீ வத்சலா கே. திசாநாயக்க

நிதியளிப்பு: ஐபீஎம்பீபீ (எம்எஸ்சீ நிகழ்ச்சித்திட்டம்)

2020 இல் எம்எஸ்சீ நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு, ஆய்வுப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒரு சுருக்கப் பிரதி AISSL இன் ஈராண்டிற்கொரு முறையான விஞ்ஞான கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட்டது.

v)இலங்கையில் *Leptospira* spp இன் மிகவும் அதிகமாக காணப்படும் செரோவார்களின் அன்டிஜன் விளக்கங்களின் ஒப்பீடு.

immunogenic *Leptospira* புரதங்களை இனங்காண்பதற்காக இலங்கையில் மிக அதிகமாக நிலவும் செரோவாக்கள் பற்றிய அன்டிஜன் விளக்கங்களை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது

ஆய்வாளர்கள்: பிரதான ஆய்வாளர்: பேராசிரியர் ஷிரோமா ஹந்துநெத்தி(IBMBB), கலாநிதி நர்மதா பெர்னேண்டோ(IBMBB)

எம்எஸ்சீ மாணவர்/ஐபீஎம்பீபீ திரு. டப்ளியு ஜீ கௌசல்யா அனுராதா

நிதியளிப்பு: ஐபீஎம்பீபீ (எம்எஸ்சீ ஆய்வு)
2020 இல் எம்எஸ்சீ நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு, ஆய்வுப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.
ஒரு சுருக்கப் பிரதி AISSL இன் ஈராண்டிற்கொரு முறையான விஞ்ஞான கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட்டது.

இ) டெங்கு

2020 இல் இரண்டு எம்பில்/பிஎச்டீ கருத்திட்டங்கள் நடைபெற்று வந்தன. ஒரு எம்எஸ்சீ கருத்திட்டம் 2020 இல் பூர்த்தி செய்யப்பட்டது.

i)டெங்கு தொற்றின் நோய்க் கிருமிகளிலுள்ள டெங்கு NS1 இன் வகிபாகத்தைத் தீர்மானித்தல்

NS1 இனால் ஏற்படுத்தப்படும் டெங்கு நோய்த்தன்மையின் பின்னாலுள்ள பொறிமுறைகளைப் புரிந்து கொள்வதை நோக்கமாகக்கொண்டது.

ஆய்வாளர்கள்: பிரதான ஆய்வாளர்: பேராசிரியர் நீலிகா மலவிகே (ஸ்ரீஜபக) – பிரதான ஆய்வாளர்: கலாநிதி சமீர சமரக்கோன் (ஐபீஎம்பீபீ), பேராசிரியர் கமனி தென்னக்கோன், (ஐபீஎம்பீபீ)

எம்பில்/பிஎச்டீ மாணவர்(ஸ்ரீஜபக): செல்வி தேஷினி சத்துரங்க ஜயதிலக்க

நிதியளிப்பு: பேராசிரியர் நீலிகா மலவிகேவிற்கு தேசிய ஆராய்ச்சிப் பேரவை
பிஎச்டீ நிகழ்ச்சித்திட்டம் 2020 இல் பூர்த்தி செய்யப்பட்டது.

ii) ஏடிஸ் கொசுக்களில் டெங்கு செரோடைப்களின் வேறுபட்ட கண்டறிதலுக்கான செலவு குறைந்த நாவல் கண்காணிப்பு கருவியாக ஒரு வண்ணமயமான தலைகீழ் டிரான்ஸ்கிரிப்ஷன் லூப்-மத்தியஸ்த ஐசோதெர்மல் ஆம்ப்ளிஃபிகேஷன் **(RT-LAMP)** மதிப்பீடு

நுளம்புகளில் டெங்கு வைரசை கண்டறிவதற்கான ஒரு மூலக்கூற்று கருவியை விருத்தி செய்வதையும் கட்டுப்படுத்தல் மூலோபாயங்களை விருத்தி செய்வதற்காக பயன்படுத்தவேண்டிய நோய்க்காவியின் bionomics களை ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டது

ஆய்வானர்கள்: பிரதான ஆய்வாளர்: கலாநிதி ஹசித்த திசேரா, தேசிய டெங்கு கட்டுபடுத்தல் அலகின் (NDCU) (தற்போது சுகாதார அமைச்சின் பரவுநோயியல் அலகில் அமைந்துள்ளது) பணிப்பாளர், பேராசிரியர் ஷிரோமா ஹந்துநெத்தி (ஐபீஎம்பிபீ), கலாநிதி நர்மதா பெர்னாண்டோ (ஐபீஎம்பீபீ), கலாநிதி ஓவீடீஎஸ் வீரசேன (ஐபீஎம்பீபீ), கலாநிதி சிசிர பத்திரன (ஐபீஎம்பீபீ), கலாநிதி சுபாஷினி ஆரியப்பெரும (லிவர்பூள் பல்கலைக்கழகம், ஐ.இ), கலாநிதி ரசிக்க பெரேரா (கொலராடோ மாநில பல்கலைக்கழகம், ஐக்கிய அமெரிக்கா)

எம்பில்/பிஎச்டீ மாணவர் (ஐபீஎம்பீபீ): செல்வி சகுந்தலா ஜானகி (பூச்சியியலாளர், NDCU)
நிதியளிப்பு: கலாநிதி ஹசித்த திசேராவிற்கு தேசிய ஆராய்ச்சிப் பேரவை (NRC-19-065)
எம்பில்/பிஎச்டீ நிகழ்ச்சித் திட்டம் 2020 இல் நடைபெற்று வந்தது.

iii) உட்சுரப்பி கலங்களில் டெங்கு வைரசுவினால் தூண்டப்படும் மாற்றங்கள் மீது உயிர்ப்பூட்டப்பட்ட NK கலங்களின் தாக்கம்

ஆய்வாளர்கள்: பேராசிரியர் ஷிரோமா ஹந்துநெத்தி (ஐபீஎம்பீபீ), கலாநிதி நர்மதா பெர்னாண்டோ (ஐபீஎம்பீபீ), செல்வி லோசினி ரனவீர (ஐபீஎம்பீபீ).

எம்எஸ்சீ மாணவர்: திரு. எம்.பி. செலெஸ்டின் (எலிசபெத் மகாராணியார் பொது நலவாய புலமைப்பரிசாளர்)

நிதியளிப்பு: ஐபீஎம்பீபீ (எம்எஸ்சீ கற்கைகள்)

2020 இல் எம்எஸ்சீ கருத்திட்டப் பணிகள் நடைபெற்று வந்தன.

ஈ) மலேரியா

பின்னர் ஏற்படும் செலவு சொத்து கொண்டுள்ள பெறுமதியில் பதியப்படும் அல்லது அச்சொத்துடன் தொடர்புபட்ட எதிர்காலப் பொருளாதார நன்மைகள் அந்நிறுவனத்திற்கு வந்துசேரும் என்பதும் அச்சொத்தினுடைய கிரயம் நம்பத்தகுந்த வகையில் மதிப்பிடப்பட முடியும் என்பது சாத்தியமானதாகவிருக்குமிடத்து மட்டும் பொருத்தமானவாறு தனிச்சொத்தாகப் பதியப்படும். ஏனைய அனைத்து பழுதுபார்த்தல்களும் பராமரித்தல்களும் அவை ஏற்பட்ட நிதிக்காலப் பகுதியில் வரவுக்கூற்றில் பதியப்படும்.

2.3.6 பெறுமானத்தேய்வு

கொள்வனவு திகதிகள் தெரிந்த சொத்துகளுக்கு, பூர்த்தியடைந்த மாதங்களின் எண்ணிக்கை அல்லது அத்தகைய சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து பாவிக்கப்பட்ட மாதங்களின் எண்ணிக்கையினடிப்படையில் பெறுமானத் தேய்வுகள் வழங்கப்படுகின்றன.
சரியான கொள்வனவு திகதி தெரியாத சொத்துகளுக்கு அவை கொள்வனவு செய்யப்பட்ட முழு ஆண்டுக்குமான பெறுமானத் தேய்வு வழங்கப்படும். சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்தரு வாழ்நாளின் மாதங்களில் விகிதாசாரத்தில் விற்பனை செய்யும் ஆண்டில் பெறுமானத்தேய்வு வழங்கப்படும்.

சகல சொத்துக்கள் மற்றும் உபகரணங்களினதும் மதிப்பிடப்பட்ட பயன்தரு வாழ்வுக் காலத்தின்மீதான கிரயத்தை பதிவழிக்குமுகமாக, ஆண்டொன்றுக்கு பின்வரும் நேர்கோட்டு அடிப்படையில் அச் சொத்துக்களின்மீது பெறுமானத்தேய்வு வருமானக்கூற்றில் பதியப்பட்டுள்ளன.

<u>பெறுமானத் தேய்வு விகிதங்கள்</u>

- கட்டிடம் ஆண்டொன்றுக்கு 5%
- வாகனங்கள் ஆண்டொன்றுக்கு 10%
- பொருத்துகைகள் ஆண்டொன்றுக்கு 10%



- அலுவலக தளபாடங்களும் உபகரணங்களும் ஆண்டொன்றுக்கு 10%
- கணனி ஆண்டொன்றுக்கு 20%
- ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் ஆண்டொன்றுக்கு 20%
- நூலக நூல்களும் சஞ்சிகைகளும் ஆண்டொன்றுக்கு 20%

2.3.7. பொருள் பட்டியல்

பொருள் பட்டியல் பொருட்களின் பெறுமதி கிரயத்தின் குறைந்த மட்டத்தில் அல்லது அவற்றின் பெறக்கூடிய மதிப்பீட்டுப் பெறுமதியில் கணிப்பிடப்படுகிறது. பெறக்கூடிய நிகர பெறுமதி என்பது, ஏற்பட்டக் கிரயத்தைத் அத்துடன்/ அல்லது அவற்றின் தற்போதைய விற்கக்கூடிய நிலையை ஏற்படுத்துவதற்கான செலவை அடைவதற்கு இடமளித்து சாதாரண வியாபாரச் செயற்பாட்டில் இப்பொருள்பட்டியல் பொருட்களை விற்கக்கூடியதாகவிருக்கும் விலையாகும்.

நிருவகத்தில் உள்ள பொருட்கள் FIFO எனும் முறையின் அடிப்படையில் விலை மதிப்பிடப்பட்டுள்ளது

2.3.8 கிடைக்க வேண்டியவைகள்

கிடைக்க வேண்டியவைகள் அவை கிடைக்கும் என மதிப்பிடப்பட்ட தொகைகளில் காட்டப்படும்.

2.3.9 காசும் காசுக்கு நிகரானவைகளும்

காசும் காசுக்கு நிகரானவைகளும் என்பது காசு வங்கி மீதி மற்றும் குறுகிய கால மூலதனம் ஆகியவற்றை உள்ளடக்கும

2.3.10 நடைமுறைச் சொத்துக்கள்

ஐந்தொகையில் நடைமுறைச் சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டவை ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் ஒரு வருடத்தில் அறவிடப்படுபவையாகும்.

2.3.11 நடைமுறை பொறுப்புகள்

ஐந்தொகையில் நடைமுறை பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்டவை ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருடத்தில் செலுத்த வேண்டியிருப்பவையாகும். தெரிந்த எல்லா பொறுப்புகளும் இறுதிக் கூற்றைத் தயாரிக்கும்போது கணக்கிலிடப்படும்.

2.3.12 ஊழியர்களுக்கான நன்மைகள்

(அ) அறுதியிட்ட நன்மைகள் திட்டம்

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான முழுமையான ஏற்பாடு கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்கீழ் பணிக்கொடைக் கொடுப்பனவிற்குத் தகுதி பெறுவதற்கு ஊழியர்கள் தொடர்ச்சியாகக் குறைந்தபட்சம் ஐந்துவருட கால சேவையைப் பூர்த்தி

செய்திருக்க வேண்டுமெனினும், சகல ஊழியர்களும் குறைந்தது ஐந்து வருட காலத்திற்காவது தொழில் புரிவார்கள் என்ற அனுமானத்தின் பேரில் தொழில் தொடங்கிய

தினத்திலிருந்து ஒரு வருடம் பூர்த்தியான பின்னர் அதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

இச்சட்டத்தின் கீழான கடப்பாட்டிற்கான ஏற்பாடானது, அரசாங்க முறிக்கான கழிவு வீதத்திற்கு நிகரான கழிவு வீதத்தைப் பயன்படுத்தி LKAS 19 விற்கமைய தற்போதைய பெறுமதி முறையின் அடிப்படையில் தீர்மானிகக்ப்படுகிறது.

ஆண்டு	முறி வீதம்
2020	8%
2019	10.5%

பமாஆ வினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி – 05/2019 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்று நிருபம் -, 2019 06.01 ஆம் திகதி முதல் கல்விசார் பணியாள் தொகுதி உறுப்பினர் மற்றும் கல்வி சாரா பணியாள் தொகுதி உறுப்பினர் ஆகியோருக்கான பணிக்கொடையை கணிப்பிடுவதில் கல்விசார் கொடுப்பனவும் மாதாந்த ஈடுசெய்தல் கொடுப்பனவும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - ப.சே.நி மற்றும் ஊ.ந.நி

ஊழியர்கள் பல்கலைக்கழக சேமலாப நிதியத்தினதும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தினதும் உறுப்பினர்களாவர். நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமான ப.சே.நி, ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி ஆகியவற்றுக்கான பங்களிப்புகள் அவை ஏற்பட்ட வகையில் செலவுகளாக வரவுக்கூற்றில் பதியப்படும்.

2.4 வரவு செலவு

2.4.1 அரசாங்க மானியம்

இலங்கை அரசாங்கத்தின் பொதுத் திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற மானியங்களும் கிடைக்கப்பெற்ற பிரத்தியேக வகுப்புக் கட்டணங்களும் அவற்றுக்குரிய செலவுகள் ஏற்பட்ட காலப் பகுதியில் வருமானமாகப் பதியப்படும்.

பொறுப்புகளற்ற சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்தப்படும் அரசாங்க மானியங்கள் நிறுத்தி வைத்த வருமானமாகப் பதியப்படும்.

2.4.2 வருமானத்தை பதிதல்

(அ) அரசாங்க மானியங்கள் (மீண்டுவரும்)

அரசாங்க மீண்டுவரும் மானியங்கள் அவை கிடைக்கப்பபெற்ற காலப்பகுதியில் பதியப்படும்.

(ஆ) அரசாங்க மானியங்கள் (மூலதன)

சொத்து மற்றும் உபகரணம் கொள்வனவு தொடர்பான மானியம் நடைமுறையல்லாத பொறுப்புகளில் நிறுத்திவைக்கப்பட்ட வருமானமாக பதியப்பட்டுள்ளதோடு, அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட வாழ்வுக் காலத்தின்படி நேர்கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் வரவு வைக்கப்பட்டுள்ளன.

(இ) மாணவர் பதிவு

மாணவர் பதிவுக் கட்டணங்கள் கிடைக்கப்பெற்ற பின்னரே அவை வருமாணமாகப் பதியப்படும்.

(ஈ) கற்கைநெறிக் கட்டணங்கள்

கற்கைநெறிக் கட்டணங்கள் கற்பித்தல் காலத்தில் பதியப்படும். தரவுகள் கிடைப்பதன் அடிப்படையில், கற்கை நெறிக் கட்டணங்கள் கிடைத்த அடிப்படையில் பதியப்படும் என்பதோடு, எதிர் காலத்திற்காக கிடைக்கப்பெறும் வருமானம் நிறுத்தி வைத்த வருமானமாகப் பதியப்படும்.

(உ) முதலீட்டு வருமானம்

முதலீட்டிலிருந்து கிடைத்த வட்டி வருமானம் அவை வந்த அடிப்படையில் கணக்கிலிடப்படும்.

2.5. காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக "நேரில் முறைமை"யைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன. காசும் காசுக்கு நிகரானவைகளும் என்பது காசு வங்கி மீதி மற்றும் குறுகிய கால வைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கும்

3. வெளிப்படுத்துகை

3.1. பொது

3.1.1. கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான ஒரு காணியில் ஐபீஎம்பீபீ அமைந்துள்ளது.

3.2. வரவு மற்றும் செலவு

3.2.1. 2020 ஆம் ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு கட்டணங்களிலான அதிகரிப்பானது, அவ்வாண்டில் ரூபா 5,855,230.81 அளவில் அமைந்திருந்த ஐபீஎம்பீபீ இன் கட்டடிங்களின் வருடாந்த பெறுமானத் தேய்வினை 2020 இல் சேர்த்துக்கொண்டமையினால் ஏற்பட்டதாகும்.

3.2.2. ஆளணியினர் வேதனங்களிலான அதிகரிப்பானது, குறிப்பாக 2020 ஆம் ஆண்டில் இரண்டு கல்விசார் பணியாளர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா.2,776,451 சம்பள நிலுவை காரணமாக ஏற்பட்டதாகும்.



குறிப்பு - 02
வங்கி மீதிகள்

		2020	2019
மக்கள் வங்கி திம்பிரிகஸ்யாய		**Rs.**	**Rs.**
கணக்கு இல.	86100121189723	3,778,883	5,111,028
	86100151192314	1,376,765	3,780,344
	86100211189723	6,252,873	8,001,522
	86100301189723	579,923	882
	86100491189723	2,974,407	124,404
	86200101189723	2,505,482	1,436,213
	86100131189671	434,338	434,313
இலங்கை வங்கி	84885727	125,860	-
திம்பிரிகஸ்யாய		**18,028,530**	**18,888,707**

குறிப்பு - 03	2020	2019
ஏனைய கிடைக்க வேண்டியவை	**Rs.**	**Rs.**
கிடைக்கவேண்டிய கற்கை நெறி வருமானம்	1,073,333	-
முற் கொடுப்பனவு	1,857,180	1,511,767
எரிபொருளுக்கான மீள செலுத்தக்கூடிய வைப்பு	50,000	50,000
டொங்களுக்கான மீள செலுத்தக்கூடிய வைப்பு	1,000	1,000
CO2 சிலிண்டருக்கான மீள செலுத்தக்கூடிய வைப்பு	83,500	83,500
கிடைக்கவேண்டிய வட்டி	1,792,453	2,170,291
வேறு	-	48,552
	4,857,466	**3,865,110**

குறிப்பு – 04	2020	2019
முற்பணம்	**Rs.**	**Rs.**
நானாவித முற்பணங்கள்	13,425	929,981
	13,425	**929,981**

குறிப்பு - 05	2020	2019
ஊழியர் கடன்கள் – நடைமுறை	**Rs.**	**Rs.**
இடர் கடன்கள	1,155,577	685,760
கணணிக் கடன்கள்	75,000	45,000
வாகனக் கடன்	8,350	25,030
ஊழியர் கடன்கள்	5,610	5,100
விசேட முற்பணம்	2,800	-
	1,247,337	**760,890**
ஊழியர் கடன்கள் – நடைமுறை அல்லாத		
இடர் கடன்கள	1,987,873	2,471,370
கணணிக் கடன்கள்	92,500	114,500
வாகனக் கடன்	10,755	19,899
ஊழியர் கடன்கள்	10,370	7,310
	2,101,498	**2,613,079**
	3,348,835	**3,373,969**

குறிப்பு - 06	2020	2019
முதலீடுகள் - நடைமுறை நிலையான வைப்புகள்	**Rs.**	**Rs.**
நிறுவன அபிவிருத்தி நிதி	-	2,618,771
உருவாக்கிய நிதி	18,842,393	17,574,988
	18,842,393	**20,193,759**
முதலீடுகள் - நடைமுறை அல்லாத நிலையான வைப்புகள்		
சகாய நிதி	4,975,870	5,011,640
நிறுவன அபிவிருத்தி நிதி	5,286,959	4,787,060
உருவாக்கிய நிதி	23,910,413	21,583,798
	34,173,243	**31,382,498**
	53,015,636	**51,576,257**



குறிப்பு – 07
சொத்து, பொறி மற்றும் உபகரணம்

விபரம்	கட்டிடம்	வாகனம்	தளபாடமும் அலவலக உபகரணங்களும்	கணனிகள்	ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணம	நூலக நூல்கள் மற்றும் சஞ்சிகைகள்	மொத்தம்
	ரூபா.	ரூபா.	ரூபா.	ரூபா.	ரூபா.	ரூபா.	ரூபா.இல் உள்ளவாறான மீதி
01/01/2020 இல் உள்ளவாறான மீதி	116,864,648.71	5,155,002.00	19,656,533.27	13,928,964.75	71,544,748.25	3,766,842.91	230,916,739.89
சேர்ந்தவை	-	-	416,416.27	1,387,285.00	3,653,801.20	-	5,457,502.47
அகற்றுதல்கள்	-	-	64,250.00	375,600.00	274,800.00	-	714,650.00
31/12/2020 இல் உள்ள மீதி	116,864,648.71	5,155,002.00	20,008,699.54	14,940,649.75	74,923,749.45	3,766,842.91	235,659,592.36
மாற்ற %	-	-	1.79	7.26	4.72	-	
பெறுமானத் தேய்வு வீதம்	5%	10%	10%	20%	20%	20%	
01 01 2020 அன்றுள்ளவாறான திரண்ட பெறுமானத்தேய்வு	75,942,023.64	1,546,500.00	4,719,975.30	6,072,769.34	33,479,178.91	1,878,449.54	123,638,896.73
சொத்துக்கள் இரு முறை பதியப்பட்டமையினால் ஆரம்ப மீதியல் செயயப்பட்ட செவ்வையாக்கல்	-	-	100.05	-	2,797.00	-	2,897.05
அகற்றுதல்கள்	-	-	25,417.00	297,204.69	217,453.51	-	540,075.20
2020ற்கான பெறுமானத் தேய்வு	5,855,230.81	515,500.00	1,984,194.47	2,919,312.27	14,601,755.85	754,821.39	26,630,814.79
31/12/2020 அன்றுள்ளவாறான திரண்ட பெறுமானத்தேய்வு	81,797,254.45	2,062,000.00	6,678,852.82	8,694,876.92	47,866,278.25	2,633,270.93	149,732,533.37
WDV 31/12/2020	35,067,394.26	3,093,002.00	13,329,846.72	6,245,772.83	27,057,471.20	1,133,571.98	85,927,058.99

	2020	2019
குறிப்பு - 08	**ரூபா.**	**ரூபா..**
ஏற்பட்ட செலவு மற்றும் வேறு செலுத்தவேண்டியவை		
ஏற்பட்ட செலவு	6,796,684	2,607,556
வரிக்காக செலுத்தவேண்டியது	21,531	17,664
செலுத்தவேண்டிய முத்திரைத் தீர்வை	3,874	800
	6,822,089	**2,626,020**

குறிப்பு - 09	**2020**	**2019**
பணிக்கொடைக்கான ஏற்பாடு	**Rs.**	**Rs.**
ஆரம்ப மீதி 01.01.2020	20,469,854	7,281,071
ஆண்டின் நிதி ஏற்பாடு	10,387,254	13,188,782
இறுதி மீதி 31.12.2020	**30,857,108**	**20,469,854**

குறிப்பு – 09.01

பணிக்கொடைக்கான ஏற்பாடு- 2021 ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டும்		
திருமதி எஸ்.டி. பிரேமதாசா	49,607	-
திருமதி எம்.கே. கஹவிட	585,192	-
	634,799	-
பணிக்கொடைக்கான ஏற்பாடு- நடைமுறை அல்லாத	**30,222,309**	**20,469,854**

குறிப்பு - 10	**2020**	**2019**
ஆய்வு மானியங்கள் - 2021	**Rs.**	**Rs.**
RPC - 2021	6,912	49,828
IPICS - 2021	352,602	352,602
NSF மானியம் III-2021	48,458	-
ஆயர்வேத திணைக்கள மானியம்-2021	2,543	2,543
சுவீடிஸ் ஆய்வு மானியம -2021	1,383,001	1,394,147
தனியாள் ஆய்வு நிதி -2021	313,550	256,728
ஆராய்ச்சி தொடக்குதல் மானியம (UGC)-2021	56,244	72,848
C/R மானிம்- செல்வி.டீவீ.டீ ஹேமாலிக்கா -2021	66,466	66,466
ஆய்வு ஒத்துழைப்பு மாணியம் - கலாநிதி எண்ரூ-2021	89,653	89,653
NSF/SCH/2016/04 2021	430,419	737,529
NSF/RPHS/2016/C 07-2021	312,750	3,234,348
CRP/LKA 17-01 2021	2,871,381	738,897
MSTR/TRD/AGR/3/02/08 (INDO) 2021	62,220	825,276
ரெஜண்ட்ஸ்களுக்கான மானியம்	1,183,596	1,183,596
ICGEB Course (W/SRI/2019-01)-2021	227,923	356,978
நோயெதிர்பியல்இனங்காணல் – பேரா.S.M. ஹந்துநெத்தி 2021	125,000	200,000
கூட்டு ஆய்வு – கலாநிதி. எஸ்எஸ்ஆர் சமரக்கோன் 2021	177,296	100,000
	7,710,013	**9,661,438**

குறிப்பு -11	2020	2019
நிறுத்தி வைத்த வருமானம்	**Rs.**	**Rs.**
MSc in MLS 2017	-	87,123
MSc in MLS 2018	-	697,674
MSc in CMI 2018	-	930,233
MSc in MLS 2019	150,000	1,345,930
MSc in CMI 2019	83,333	1,492,463
MSc in Bioinformatics 2019	-	2,261,628
MSc in MLS 2020	525,000	-
MSc in CMI 2020	272,894	-
	1,031,227	**6,815,051**

குறிப்பு - 12	2020	2019
ஆய்வு மானியங்கள்	**Rs.**	**Rs.**
RPC 2020	42,916	-
NSF மானியம் III-2020	-	48,458
சுவீடிஸ் ஆய்வு மானியம் 2020	11,146	-
ஆராய்ச்சி தொடக்குதல் மானியம் (UGC) 2020	16,604	-
NSF/SCH/2016/04 2020	307,110	1,192,965
NSF/RPHS/2016/C 07-2020	2,921,598	6,936,451
CRP/LKA 17-01 2020	181,770	3,260,004
MSTR/TRD/AGR/3/02/08 (INDO) 2020	763,056	1,026,362
ICGEB Course (W/SRI/2019-01)-2020	369,688	2,147,993
நோயெதிர்பியல்இனங்காணல் -2020 – பேரா.S.M. ஹந்துநெத்தி	75,000	-
கூட்டு ஆய்வு 2020 – கலாநிதி. எஸ்எஸ்ஆர் சமரக்கோன்	172,704	-
	4,861,593	**14,612,233**

குறிப்பு - 13	2020	2019
உருவாக்கிய வருமானம்	**Rs.**	**Rs.**
வருடாந்த கூட்ட அனுசரணை	-	98,400
பரீட்சைக் கட்டணம்	486,561	364,500
Msc கற்கை நெறிக் கட்டணம்	13,142,021	9,326,324
சான்றிதழ் கற்கை நெறி	-	438,162
விண்ணப்பக் கட்டணம்	1,354,746	974,425
கட்டுறு பயில்வு வருமானம்	60,000	60,000
மாதிரி சேகரிப்புக் கட்டணம்	765,975	657,000
நூலகக் கட்டணம்	-	66,000
திரவமாக்கல் சேதம்	153,140	-
	15,962,443	**11,984,811**

குறிப்பு - 14	2020	2019
ஏனைய வருமானம்	**Rs.**	**Rs.**
கணணிக் கடன் வட்டி	5,903	7,543
ஊழியர் கடன் வட்டி	759	981
Transcript கட்டணம்	35,131	45,500
இடர் கடன் வட்டி	127,248	143,095
வாகனக் கடன் வட்டி	1,560	5,366
விசேட முற்பண வட்டி	573	1,116
வேறு சில்லரை வருமானம்	91,418	157,207
	262,592	**360,808**



குறிப்பு - 15 **ஆளணணி வேதனங்கள்**	2020 Rs.	2019 Rs.
சம்பளங்களும் கூலிகளும்	28,263,205	24,572,590
ஓய்வூதியம்	4,781,095	4,115,885
ஊ.ந.நி.	3,373,011	2,821,900
ஊ.சே.நி.	1,829,405	1,539,722
கல்விசார் படிகள்	803,935	609,672
வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு	20,707,141	16,809,679
ஓய்வூதியம்	3,172,188	3,103,813
மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு	167,192	282,699
வேறு கொடுப்பனவுகள்	10,115,221	9,107,101
பதிற்கடமை கொடுப்பனவு	733,029	192,500
ஆய்வுக் கொடுப்பனவு	5,275,237	4,300,763
கொடுப்பனவுகள்	4,233,581	9,523,353
வருகைதரு விரிவுரையாளர் கொடுப்பனவு	935,500	1,035,750
சொத்துக் கடன் வட்டி	74,113	92,682
	84,463,850	**78,108,109**

குறிப்பு - 16 **வழங்கல்கள்**		2020 Rs.	2019 Rs.
எழுது கருவிகளும் அலுவலக தேவைகளும்		455,485	963,378
எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி		259,948	324,216
சீருடைகள்		22,015	6,484
இரசாயனங்கள், கண்ணாடிப் பொருட்கள்	**குறிப்பு 16.1**	12,261,979	8,238,817
வேறு		30,576	10,414
		13,030,002	**9,543,309**

குறிப்பு -16.1
இரசாயனங்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள்

ஆரம்ப மீதி	6,797,539	6,033,341
ஆண்டின்போதான கொள்வனவு	9,154,919	9,003,015
	15,952,458	15,036,356
இறுதி மீதி	(3,690,480)	(6,797,539)
	12,261,979	**8,238,817**

குறிப்பு - 17 **பராமரிப்புச் செலவு**	2020 Rs.	2019 Rs.
	2,942,776	4,027,952
மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு	228,859	26,025
பொறி, இயந்திரம், உபகரணம்	374,422	1,389,856
கட்டிடங்களும் கட்டமைப்புகளும்	410,825	146,602
அலுவலக உபகரண பராமரிப்பு	341,763	273,592
ஏனையவை	**4,298,646**	**5,864,027**

குறிப்பு - 18 **ஒப்பந்தச் சேவைகள்**	2020 Rs.	2019 Rs.
போக்குவரத்து	105,082	183,435
தொலைத் தொடர்பு	1,783,400	2,049,576
தபாற் கட்டணம்	52,760	126,356
பாதுகாப்புச் சேவை	1,752,144	1,886,535
மின்சாரம்	7,149,350	8,390,857



நீர்	200,775	267,706
சுத்தீகரிப்புச் சேவை	2,295,214	3,162,467
கட்டணங்கள், வரிகள், உள்ளூரதிகார சபை	199,584	199,584
அச்சிடல், விளம்பரம் முதலியவை.	692,843	1,096,286
ஏனையவை.	462,641	863,585
	14,693,792	**18,226,387**

குறிப்பு - 19	**2020**	**2019**
வேறு மீண்டெழும் செலவுகள்	**Rs.**	**Rs.**
விசேட சேவைகள் - சபை கூட்டங்கள், குழுக்கள்	391,562	510,797
செயலமர்வுகள், கருத்தரங்குகள்	-	52,629
கல்விசார் ஆய்வு	188,905	199,438
பணியாள் அபிவிருத்தி	163,575	213,504
களிப்பூட்டல் செலவுகள்	26,745	252,222
பங்களிப்புகள், உறுப்புரிமைக் கட்டணம்	633,636	1,028,375
வங்கி அறவீடுகள்	30,003	45,618
விடுமுறை வரண்டுகள் சீசன் டிக்கெட்டுகள்	59,100	69,900
பட்டமளிப்பு விழா	68,000	-
பரீட்சைச் செலவுகள்	791,731	1,016,287
கணக்காய்வு கட்டணம்	400,000	500,000
சான்றிதழ் கற்கைநெறி செலவுகள்	-	567,675
அகற்றல் நட்டம்	144,575	-
வருடாந்த விஞ்ஞான கூட்டத்தொடர்	-	264,138
கொடுப்பனவு வழி	-	60,000
விருதுகளும் காப்பீடுகளும்	-	600,000
மருத்துவ காப்பீடு	49,199	243,448
ஏனையவை	22,875	79,825
	2,969,905	**5,703,855**


குறிப்பு - 20	**2020**	**2019**
வாக்குறுதியளிக்கப்பட்ட மூலதன மானியம்	**Rs.**	**Rs.**
திறைசேரி	(9,395,615)	9,869,143
கலப்பு	278,951	278,951
உருவாக்கிய	110,394	110,394
SIDA SAREC	99,302	99,302
ஆய்வு மானியங்கள்	-	-
	(8,906,968)	**10,357,790**

2020 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் பற்றிய மீளாய்வு

ஐபீஎம்பீபீ இன் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் வழமைபோல் ஐபிஎம்பீபீ இன் கணக்காய்வுக் குழுவின் ஒருங்கிணைவோடு கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளரினால் மேற்கொள்ளப்பட்டது.

சம்பந்தப்பட்ட ஆண்டில் நான்கு கணக்காய்வு குழுக் கூட்டங்களளுக்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், ஆண்டு முழுவதும் நிலவிய பெருந்தொற்று காரணமாக சம்பந்தப்பட்ட ஆண்டில் மூன்று கூட்டங்கள் மாத்திரமே நடத்தப்பட்டன.

ஐபீஎம்பீபீ இன் கணக்காய்வுக் குழு கூட்டங்களில் முன்வைக்கப்பட்ட ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் கவனத்தில் கொண்டு, நிர்வாகம் மற்றும் நிதி அம்சங்கள் ஆகிய இரண்டிலும் முகாமைத்துவச் செயற்பாடுகளை உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் மேம்படுத்தியுள்ளன.



பேராசிரியர் கே.பி. ஹேவகமகே
தலைவர்
ஐபீஎம்பீபீ இன் கணக்காய்வுக் குழு

தட்டுப்பாடுகள் - 2020

இரண்டு முறை ஏற்பட்ட COVID-19 தொற்று காரணமாகவும் 2020 மரர்ச் மாதமும் ஒக்டோபர் மாதமும் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்தமையினாலும் கல்விசார் மற்றும் ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் கணிசமானளவு தடைப்பட்டன. ஒரே ஆண்டில் நிலவிய இடையூறு மிக்க இவ்விரண்டு ˙காலப்பகுதியின் காரணமாக றிஜெண்ட்ஸ் மற்றும் இரசாயனங்கள் கொள்வனவு செய்வது தாமதமடைந்தமையினால் ஒட்டுமொத்த கால இழப்பு இதிலும் கூடியதாக இருந்தது. எனவே, எம்எஸ்சீ மாணவர்களின் கருத்திட்ட பூர்த்தி ஆய்வுப் பத்திரங்களின் சமர்ப்பணம் ஆகியவற்றிற்கான கால எல்லைகளுள் சில நீடிக்கப்பட வேண்டியிருந்தது. எனவே, கற்கை நெறியை நிறைவு செய்தல் எதிர்ப்பார்க்கப்பட்டவாறு 2020 டிசெம்பர் மாதத்திற்கு முன்னர் நிறைவேற்ற முடியவில்லை. மேலும், தேசிய விஞ்ஞான மன்றம், தேசிய ஆராய்ச்சிப் பேரவை மற்றும் மரபணு எஞ்சினிரிங் மற்றும் உயிர்தொழில்நுட்பவியலுக்கான சர்வதேச நிலையம் (ICGEB), இத்தாலி முதலிய வெளிவாரி நிதியளிப்பு நிறுவனங்களினால் நிதியளிக்கப்படும் ஆராய்ச்சிப் பணிகளில் இது தாமதங்களை ஏற்படுத்தியது. மூலக்கூற்று உயிரியல் மற்றும் கல வளர்ச்சி நுட்பங்கள் மற்றும் நோயெதிர்ப்பியலில் உயர் தர சான்றிதல் கற்கை நெறி ஆகியன தொடர்பான குறங்கால பயிற்சி நெறிகள் ஒத்தி வைக்கப்பட்டன. மேலும், ACU (பொதுநலவாய) புலமைப் பரிசாளர்களும் COVID-19 பெருந் தொற்று நிலைமையினால் ஏற்படுத்தப்பட்ட வதிவிடப் பிரச்சினைகளினால் சிரமங்களை எதிர்நோக்கினர்.

2020 ஆம் ஆண்டில் இருந்த ஆய்வுகூட இடவசதியானது, மாணவர் அனுமதியை மேலும் அதிகரிப்பதற்குப் போதுமானதாக இருக்கவில்லை. அத்துடன், 2020-2024 ஆண்டு மூலோபாயத் திட்டத்தின் சில செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதிய மனித மற்றும் நிதி வளங்கள் இல்லாதிருந்தமை போன்ற ஏனைய தடங்கல்களும் நிலவின. ஐபீஎம்பீபீ கொழும்புப் பல்கலைக் கழக வளாகத்தினுள் அமைந்திருப்பதனால் கட்டிட இட வசதியை விரிவாக்குவதற்கு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அனுமதி கோரப்பட்டது. ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றியும் ஐபீஎம்பீபீ ற்கான கட்டிட விஸ்தரிப்பிற்கான பொருத்தமான நியாயப்பாடுகளையும் பல்கலைக்கழகம் கோரியுள்ளது. எனினும், ஐபீஎம்பீபீ ற்கான கட்டிட விரிவாக்கம் தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கான முதன்மைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது..

துணை ஆளணியினருக்கான புதிய ஆளணிப் பதவிகள் 2017 ஆம் ஆண்டு 3 வது காலாண்டுப் பகுதியில் கிடைக்கப்பெற்றபோதிலும், சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகளின் பட்டியல் கிடைக்காமையினால் அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு (SOR) அனுமதி கிடைக்காமையினால் 2020 இல் எட்டு ஆளணிப் பதவிகள் வெற்றிடமாக இருந்தன. செப்டெம்பர் 2020 இல், பட்டப் பின் கலாநிதி ஆய்வு மாணவர் (PDRF) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு திட்டத்திற்கான (SOR) அனுமதி UGC விடமிருந்து கிடைக்கப்பெற்றது. பேரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் 2020 டிசெம்பர் மாதமளவில் மூன்று PDRF பதவி வெற்றிடகங்ளை நிரப்புவதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறை ஆரம்பிக்கப்பட்டது.

ஐபீஎம்பீபீ ற்கு நான்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் உண்டு. 2020ஆம் ஆண்டில் மூன்று தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மாத்திரமே இருந்தனர். பொருத்தமான தகைமைகளுடன் ஒரு தேர்ச்சி பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் மாத்தரமே உள்ளார். ஏனைய இருவரும் இன்னும் பயிற்சி பெற்று வரும் பயிலுனர்தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாவர் என்பதோடு, தகுதிகாண் நிலையில் உள்ளவர்களாவர்.

குறைவான செயலாற்றுகை காரணமாக ஒரு பயிலுநர் தொழில் நுட்பவியலாளரது சேவையை முடிவுறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. 2020 இல், போதாத பெயர் பட்டியல் 2020 இன் இறுதிப் பகுதியிலேயே கிடைக்கப்பெற்றமையினால் 2020 இன் நான்காவது காலாண்டுப் பகுதி வரை நிரப்ப முடியாதுபோன இரண்டு பயிலுநர் தொழில் நுட்பவியலாளர் பதவிகள் வெற்றிடமாக இருந்தன. கிடைக்கப்பெற்ற பெயர் பட்டியல் இரண்டு பெயர்களை மட்டுமே கொண்டிருந்தது. ஆட்சேர்ப்பிற்பு எழுத்துப் பரீட்சை மற்றும் செயன்முறை பரீட்சை ஆகியவறறை உள்ளடக்கிய தெரிவு நடைமுறையை தொடங்குவதற்கு அது போதுமானதாக இருக்கவில்லை.

2021 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டம்

கற்பித்தல்:

- தற்போதைய எம்எஸ்சீ நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மாணவர் அனுமதியை அதிகரித்தல்
- புதிய கலைத்திட்டத்தின்கீழ் எம்எஸ்சீ (எம்எல்எஸ், சீஎம்ஐ மற்றும் பீஐ) அனுமதி
- தற்போதைய எம்எஸ்சீ மற்றும் பிஎச்டி நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்தல்/ ஸ்திரப்படுத்தல்
- விரிவான வள வங்கி பீடமொன்றைத் தாபித்தலும் பராமரித்தலும்.
- கலப்புக் கற்றலின்மூலமான ஒரு புதிய கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டத்தை நிறுவுதல்
- நவீன கற்றல்/கற்பித்தல் முறைமைகளை ஸ்திரப்படுத்தல்
- மாணவர்களின் ஆங்கில மொழி, விஞ்ஞான ஆக்கங்கள், சமர்ப்பணம், தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில் நுட்ப அறிவு ஆகியவற்றை மேம்படுத்தல்.

ஆராய்ச்சி:

- பிஎச்டீ நிகழ்ச்சித் திட்டங்களின் நோக்கெல்லையை விரிவுபடுத்தல்.
- எம்பில்/பிஎச்டீ நிகழ்ச்சித் திட்டங்களுக்கான புதிய அனுமதிகள், தொழில் வாண்மையாளர்கள்/டெக்னோகிராட்கள் ஆகியோருக்கு மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்களின் பிரயோகத்தில் பயிற்சியளித்தல்
- ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் புதிய அறிவை உருவாக்குதல்
- மூலக்கூற்று உயிர் விஞ்ஞான நோய் எதிர்ப்பியல், உயிர்த் தகவலியல் மற்றும் அதனோடு தொடர்புபட்ட துறைகளின் கருவிகளை அடிப்படையாகக்கொண்டு தீர்வு தேவைப்படும் முன்னுரிமை துறைகளை இனங்காணுதல்.
- மருத்துவத் தாவரங்கள் மற்றும் கடல் வளங்கள் ஆகியவற்றிலிருந்தான புதிய மருந்து இலக்குகளை இனங்காண்பதை நோக்கிய ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களின் அமுலாக்கம்.
- தனிப்பட்ட மருத்துவம் மற்றும் மானுட மரபணு வேறுபாடு ஆகியவற்றை இலக்காகக் கொண்ட R மற்றும் D (ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்) பணிகளுக்கான புதிய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை தாபித்தல்.
- உயிர் மருத்துவ விஞ்ஞானங்கள் மற்றும் தாவர மூலக்கூற்று உயிரியல் ஆகியவற்றில் தற்போதுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்தலும் தேவையானவிடத்து புதிய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்தலும்.
- பீட உறுப்பினர்கள்/இணைச் செயற்பாட்டாளர்கள் போட்டித் தன்மை மிக்க தேசிய/சர்வதேச ஆய்வு மானியங்களை பெற்றுக் கொள்ள ஊக்கமளித்தலும் உதவி புரிதலும்
- ஆராய்ச்சி நிறுவனங்களோடு/ தனியார்துறை நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளல்
- புலமைச் சொத்துரிமை விண்ணப்பங்களையும் வெளிப்படுத்தாதிருத்தல் ஒப்பந்தங்களையும் பூர்த்திசெய்தல்
- சுகாதாரத் துறையோடு ஒத்துழைப்பு ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்களை வலுப்படுத்தல்
- ஏனைய பீடங்கள்/பல்கலைக் கழகங்கள் மற்றும் தனியார்துறை கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்தல்
- அறிவு/ஆய்வு முடிவுகளைப் பரப்புதல்.

சேவைகள்.:

- கைத்தொழில் துறையினருடன்/ தனியார் துறையுடன் ஒத்துழைப்பை விருத்தி செய்தல்
- உயிரியல் தரவுத் தள கண்ணாடிகளைப் பேணுதலும் நவீனப்படுத்துதலும்



- உயிர்த் தகவலியலை அடிப்படையாகக் கொண்ட கற்றலுக்கு/ஆராய்ச்சிக்கான இணையவழி கருவிகளை வழங்குதல்
- மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்களில் ஏற்பட்டுள்ள முக்கிய அபிவிருத்திகளை வழங்கும் ஆவணக் காப்பகமொன்றை நிறுவுதல்
- ஐபீஎம்பீபீ ஐ நிறுவுவதற்கு வழி வகுத்த வரலாற்று நிகழ்வுகள் பற்றிய ஆவணக் காப்பகமொன்றை பூர்த்தி செய்தல்.
- வியாபார அபிவிருத்தித் திட்டத்தினூடாக நிதியை உருவாக்குதல்
- புற்றுநோய் மற்றும் ஏனைய நோய்களுக்கும் பெருந்தோட்டத் துறையினருக்கும் நோய் .இனங்காணல் சேவை
- ஆலோசனைச் சேவை
- கட்டணம் அறவிடும் பட்டப் பின்படிப்பு மற்றும் ஏனைய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்
- தொழில்வாண்மையாளர்கள்/டெக்னோகிராட்கள் ஆகியோருக்கு மூலக்கூற்று உயிர் விஞ்ஞானம், நோய் எதிர்ப்பியல், உயிர்த் தகவலியல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட துறைகளின் பிரயோகத்தில் பயிற்சியளித்தல்.

சர்வதேச தரத்தை பேணுதல்

- வெளிநாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவகங்களோடு தற்போதுள்ள ஒத்துழைப்பை மேம்படுத்தல்/புதிய ஒத்துழைப்புகளை விருத்தி செய்தல்
- மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்கள், நோய் எதிர்ப்பியல், உயிர்த் தகவலியல் மற்றும் அவற்றோடு தொடர்புபட்ட துறைகள் ஆகியவற்றில் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பயிற்சி வழங்குதல்
- உயிர்த் தகவலியல், மூலக்கூற்று உயிர் விஞ்ஞானங்கள், நோய் எதிர்ப்பியல், மற்றும் அதனோடு தொடர்புடைய துறைகளில் மாணவர்களுக்கு/ஆசிரியர்களுக்கு இணையக் கற்றலுக்கான விடயப்பரப்பினை விருத்தி செய்தல்
- உயிர்த் தகவலியலில் இணைய ஆசிரியர்களுக்கும் இணைய வளங்களுக்குமான மிகச் சிறந்த சர்வதேச நிலையங்களோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளல்
- வெளிவாரி மீளாய்வு முறை ஒன்றைத் தாபித்தல்
- விஞ்ஞான மற்றும் உயிர் மருத்துவ ஆராய்ச்சிகளில் ஒழுக்க நடைமுறைகள்
- மரபணு ஆராய்ச்சி மற்றும் மரபணு தகவல்களில் ஒழுக்க, சமூக மற்றும் சட்டச் சிக்கல்கள்
- பீட உறுப்பினர்களுக்கு குறுகிய கால வெளிநாட்டு பயிற்சிகளுக்கான வாய்ப்புகளை வழங்குதல்
- பீட உறுப்பினர்கள்/ ஒத்துழைப்பாளர்கள்/ மாணவர்கள் ஐபீஎம்பீபீ இல் மேற்கொண்ட ஆய்வுகளை சர்வதேச மாநாடுகளில் சமர்ப்பிப்பதற்காக அவற்றில் பங்குபற்றுவதற்கு அவர்களுக்கு ஊக்கமளித்தலும் உதவி புரிதலும்

ஆளுகை:

- பயிற்சிக் கொள்கையொன்றையும் வழிகாட்டுநெறிகளையும் விருத்திசெய்தல்
- பணியாள் தொகுதியினருக்கும் மாணவர்களுக்குமான ஒழுக்கக் கோவை
- ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இயைந்தொழுகுதல்

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை - 2020

My No.} HED/B/IBMBB/2020/FA/01 Your No.} Date} 08th April 2021

பணிப்பாளர்,
உயிர் இலரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர்தொழில்நட்பவியல் நிறுவகம்

உயிர்இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நட்பவியல் நிறுவகத்தின் 2020 டிசமெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் கண்காணிப்பு தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 ற்கமைய மேற்கொள்ளயப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

கொழும்புப் பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டுள்ள உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் 2020 டிசெம்பர் 31ஆம் திகதியன்றுள்ளவாறான நிதிநிலை பற்றிய கூற்றுக்கள், அப்போது முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை கூற்றுகள் பங்குமுதலில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய கூற்றுகள், காசுப் பாய்ச்சல் கூற்றுகள் மற்றும் குறிப்பிடத்தகுந்த கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய ஒரு சுருக்கம் அடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய, அந்நிறுவகத்தின் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வானது, பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 108(1) உடனும் 2003 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க உயிர்இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவக சட்டத்தின் 17 ஆம் பரிவின் விதிப்புரைகளுடனும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 18 மற்றும் உப பிரிவு 107(5) ஆகியவற்றுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154(1) இன் ஏற்பாடுகளுக்கும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் ஏற்பாடுகளுக்கும் அமைய எனது வழிகாட்டுதலின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய, எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது கருத்தின்படி, இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய, இந்நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் இந்நிறுவகத்தின் 2020 டிசெம்பர் 31 ஆம் திகதி அன்றுள்ளவாறான நிதி நிலை பற்றியதும் அப்போது முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் காசப் பாய்ச்சல் ஆகியன பற்றியதுமான உண்மையானதும் நியாயமானதுமானதொரு தோற்றத்தை வழங்குகின்றன.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய இக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக் கணக்காய்வு நியமங்களுக்கமைய, எனது பொறுப்பானது, நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பிரிவின் கீழ் மேலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. எனது கருத்தின்படி, எனது அபிப்பிராயத்திற்கான ஓர் அடிப்படையயை வழங்குவதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான சான்றுகள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

1.3 ஆண்டறிக்கை – 2020 இல் உள்ளடக்கபட்டுள்ள ஏனைய தகவல்கள்

இந்நிறுவகத்தின் ஆண்டறிக்கை - 2020 இல் உள்ளடக்கப்பட்டுள்ள இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டவையும், எனினும் நிதிக் கூற்றுக்களிலும் எனது கணக்காய்வு அறிக்கையிலும் எவ்வித குறிப்பும் தரப்படாதவையுமான தகவல்கள் வேறு தகவல்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளன. இவ் வேறு தகவல்கல் என்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயம் இவ் வேறு தகவல்களை உள்ளடக்கவில்லை. எனவே, அவற்றை நான் உறுதிப்படுத்தவும் இல்லை; அவை தொடர்பாக எவ்வித அபிப்பிராயத்தையும் வெளியிடவும் இல்லை.

நிதிக் கூற்றுகள் மீதான எனது கணக்காய்விற்கமைய, மேலே இனங்காணப்பட்ட அவ் வேறு தகவல்களை படித்துப் பார்ப்பதும் அவ் வேறு தகவல்கள் நிதிக் கூற்றுக்களிலிருந்து அல்லது கணக்காய்விலிருந்து அல்லது வேறு ஏதேனும் மார்க்கமாக நான் பெற்றுக் கொண்ட எனது அறிவிற்கமைய தொகைகளுக்கு அமைவானதாக இல்லையா எனப் பார்ப்பதும் எனது பொறுப்பாகும். இவ்விடயம் தொடர்பாக நான் அறிக்கையிடுவதற்கு எதுவுமில்லை.

1.4 நிதிக் கூற்றுகளுக்கான முகாமைத்துவத்தினதும் கட்டுப்படுத்தும் தரப்பினரதும் பொறுப்பு

இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய இந்நிதிக்கூற்றுகளை சிறப்பாகத் தயாரித்து சமர்ப்பிப்பதும், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படும் முக்கிய பிழைக் கூற்றுக்களற்ற நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் இந்நிறுவகத்தின் நன்கியங்கும் நிறுவன ஆற்றல் தொடர்பாக தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். நிறுவகத்தைக் கலைத்துவிடுவதென முகாமைத்துவம் எண்ணினால் அல்லது வேறு வழியேதும் இல்லாமையால் செயற்பாட்டை நிறுத்திவிட எண்ணினாலொழிய, நன்கியங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் கணக்ககளையும் நன்கியங்கும் நிறுவனம் தொடர்பான உண்மைகளின் வெளிப்படுத்தல்களையும் பேணுவதும் முகாமைத்துவத்தின் பொறப்பாகும்.

பல்கலைக்கழகத்தின் கட்டுப்படுத்தும் தரப்புகள் நிதி அறிக்கையிடல முறைமையை சோதனை செய்வதற்குப் பொறுப்பாகும்.

2018 அம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவிற்கமைய, இப்பல்கலைக்கழகம் தொடர்பான ஆண்டு மற்றும் காலகால நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படுவதற்கேற்றவாறு இந்நிறுவகம் அதன் அனைத்து வருமானம், செலவினம் மற்றம் சொத்துக்கள் மற்றும் பொறுப்பகள் தொடர்பான ஏடுகள் மற்றும் பதிவுகள் ஆகியவற்றைப் பேண வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி காரணமாகவோ அல்லது தவறு காரணமாகவோ ஏற்படும் முக்கிய பிழைக் கூற்றுக்கள் அற்றதாக முழு நிதிக் கூற்றுக்களும் அமைந்துள்ளனவா என்பது பற்றி நியாயமான உத்தரவாதமொன்றை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கும் ஒரு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஓர் உயர்ந்த மட்ட உத்தரவாதமாகுமெனினும், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக கணக்காய்வு நடத்தப்படும்போது அது தொகைரீதியான பிழைக்கூற்றுக்களை எப்போதும் வெளிப்படுத்தும் என்று உறுதிப்படுத்தாது. மோசடி அல்லது பிழையின் தனித்தனி அல்லது கூட்டு தாக்கம் தொகைரீதியான பிழைக் கூற்றுக்களுகள் ஏற்பட காரணமாகும் என்பதோடு, இந்நிதிக் கூற்றக்களின் அடிப்டையில் அதனைப் பயன்படத்துவபர்களினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களின்மீது ஒரு தாக்கத்தையும் கொண்டிருக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இக் கணக்காய்வு என்னால் தொழில்வாண்மைத்துவ முடிவுகளோடும் தொழில்வாண்மைத்துவ சந்தேகத்தோடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படும் இடர்களைத் தவிர்க்குமுகமாக, மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பிழைக் கூற்றுக்களை இனங் காண்பதிலும் மதிப்பிடுவதிலும் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதே எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். முக்கிய பிழைக் கூற்றக்களின் தாக்கத்மைதவிட மோசடி அதிக தாக்கத்தைக் கொண்டிருக்கும். அத்துடன் சேரந்து குற்றமிழைத்தல், போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் ஆகியன மோடிக்கு வழிவகுக்கலாம்.

- நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை மீது ஓர் அபிப்பிராயத்தை வெளியிடும் நோக்கத்திற்காக அன்றி, அவ்வச் சூழ்நிலைகளில் பொருத்தமானதாக அமையும் கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் முகமாக, நிறுவகத்திற்கு பொருத்தமான உள்ளக கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கவனத்தில் கொண்டார்.

- முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாட்டை மதிப்பிடுதல் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்ககீட்டு மதிப்பீடுகளின் நியாயபூர்வத் தன்மை அத்துடன் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு ஆகியவற்றை கணக்காய்வு உள்ளடக்கியது.

- நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை காரணமாக நிறுவகத்தின் நன்கியங்கும் நிறுவனம் என்ற நிலைக்கு போதுமான காரணிகள் உள்ளனவா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்டையிலேயே கணக்கீட்டு நோக்கத்திற்காக நன்கியங்கும் நிறுவன அடிப்படையைப் பயன் படுத்துவதின் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்படுகிறது. போதுமான காரணிகள் உண்டென நான் தீர்மானிக்குமிடத்து, எனது கணக்காய்வு அறிக்கை நிதிக்கூற்றுக்களில் காணப்படும் தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களை ஆராயும் என்பதோடு, வெளிப்படுத்தல்கள் போதாதெனில், எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்படவேண்டும். எனினும், நன்கியங்கும் நிறவனம் என்ற நிலை எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் காரணமாக முடிவுறக்கூடும்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக, நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பணம், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் ஆகியவை மதிப்பீடு செய்யப்பட்டதோடு, அதன் பின்னாலுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் ஆகியவை நிதிக்கூற்றக்களில் பொருத்தமானதும் நியாமானதுமான ஒரு முறையில் உள்ளடக்கப்பட்டனவான என்பதை காண்பதற்காக அவை மதிப்பீடு செய்யப்பட்டன.

- முக்கிய கணக்காய்வு கண்டறிதல்கள், பிரதானமான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட வேறு விடயங்கள் பற்றி கட்டுப்படுத்தும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது.

2. வேறு சட்ட மற்றும் ஒழுங்குவிதி தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 கீழே குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் உள்ளடங்கியுள்ளன.

2.1.1 2018 அம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) ஆம் பிரிவின் நிபந்தனைகளுக்கமைய, கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டுள்ளேன். எனது ஆய்வில் கண்டறிப்பட்டவாறு, உரிய நிதி அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன.

2.1.2 2018 அம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 6(l) (d) (lll) ஆம் பிரிவிற்கமைய, இந் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் முந்தைய ஆண்டின் அறிக்கைக்கு இயைபானவையாக உள்ளன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 6 (l) (d) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கமைய, முந்தைய ஆண்டில் நான் செய்த பரிந்துரைகள் தற்போது சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் ஆகியவற்றிற்கமையவும் தொகை ரீதியான வடயங்களின் கட்டுப்பாடுகளுக்குள்ளும், பிண்வரும் கூற்றக்களை மேற்கொள்வதற்குப் போதுமான எதுவும் எனது கவனத்தில் பட வில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கமைய, நிறுவகத்தால் செய்துகொள்ளப்பட்டதும், வழமையான வியாபரர ஏற்பாட்டிற்கு அப்பாற்பட்டதுமான ஏதேனும் ஒப்பந்தத்தில் நிறுவகத்தன் பணிப்பாளர் சபை உறுப்பினர் எவருக்கேனும் நேரடி அல்லது மறைமுக நலன் உண்டு.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கமைய, கணகப்காய்விற்கு உட்படும் நிறுவனம் எழுதப்பட்ட ஏற்புடைய ஏதேனும் சட்டத்திற்கு அல்லது இந்நிறுபவனத்தின் ஆட்சி சபையினால் விடுக்கப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இயைந்தொழுகவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கமைய, இப் பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றிற்கமைய செயலாற்றவில்லை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கமைய, கணக்காய்விற்கட்பட்ட நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைக்குள்ளளும் உரிய சட்டங்களுக்கமையவும் சிக்கனமாக, செயற்திறனாக மற்றும் பயன்மிக்கதாக பெற்றுக் கெள்ளப்பட்டிருக்கவும் பயன்படத்தப்பட்டிருக்கவும் இல்லை.

டப்ளியூ. பி .சீ. விக்கிரமரத்ன
கணக்காயவாளர் நாயகம்

ஆண்டறிக்கை மற்றும் கணக்குகளின் சுருக்கம் – 2020

1. வளங்கள் மற்றும் மாணவர்களது விபரம்:

பீடம்	கற்கை நெறி	மொத்த மாணவரகள்	மொத்த கல்விசார் பணியாளர்கள்	மொத்த கல்வி சாரா ஊழியர்கள்
ஐபீஎம்பீபீ கொபக	எம்எல்எஸ் முதுமானி/எம்எல்எஸ் இல் எம்எஸ்சீ	28	9(+1)#	21*(+1^)
	சீஎம்ஐ முதுமானி/சீஎம்ஐ இல் எம்எஸ்சீ	12		
	பீஐ முதுமானி/பீஐ இல் எம்எஸ்சீ	19		
	எம்பில	25		
	பிஎச்டீ			
	எம்பில்/ பிஎச்டீ க்கு வேறு நிறுவகங்களில் பதிவு செய்து ஐபீஎம்பீபீ இல் ஆய்வின் ஒரு பகுதியை நிறைவேற்றியோர்	01		
	ஏனைய உயர் கல்வி நிறுவனங்களிலிருந்து வந்த பட்டதாரி மாணவர்களுக்கு மூலக்கூற்று உயிரியல் மற்றும் நோய்எதிர்ப்பியல் பற்றி அறியத் தரல்	40		
	கைத்தொழில் பயிற்சி அமர்த்துகைகள்	01		
மொத்தம்		**126**	**9(+1)**	**22**

நோய்எதிர்ப்பியல் பேராசிரியர் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

* 05 கல்விசார் துணைப் பணியாளர்களை உள்ளடக்குகிறது (01- உதவி வலைப்பின்னல் முகாமையாளர் மற்றும் 04 விஞ்ஞான உதவியாளர்கள்

^ உதவி காசாளர

2. கல்விசார் பணியாளர் விபரம்:

பீடம்	விடயம்	மொழி மூலம்	சிரேஷ்ட பேராசிரியர்	பேராசிரியர்	சிரேஷ்ட விரிவுரையாளர்	விரிவுரையாளர்	துணை விரிவுரையாளர்	கலாநிதிப்பட்டத்திற்திற்கு பின்னரான ஆய்வு மாணவர்கள்
	மூலக்கூற்று உயிர் விஞ்ஞானம்	ஆங்கிலம்	1	-	-	-	-	-
	கல மற்றும் மூலக்கூற்று நோய்எதிர்ப்பியல்	ஆங்கிலம்	-	1*	2	-	1	1
	மூலக்கூற்று உயிரியல்	ஆங்கிலம்	-	1	-	-	1	1
	உயிர் இரசாயனவியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல்	ஆங்கிலம்	-	1	**1**	-	-	-
	மரபணு இனங்காணல்	ஆங்கிலம்	-	-	1	-	-	-
	கல உயிரியல்.	ஆங்கிலம்	-	-	**1**	-	-	-
	தாவர மூலக்கூற்று உயிரியல்	ஆங்கிலம்	-	-	1	-	-	-
மொத்தம்			**1**	**2+1***	**6**	**-**	**2**	**2**

*நோய்எதிர்ப்பியல் பேராசிரியர் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

3. நிர்வாக மற்றும் கல்வி சாரா பணியாளர் விபரம்:

பீடம்/கிளை	மிக சிரேஷ்ட	சிரேஷ்டபணியாளர்	கனிஷ்ட பணியாளர்	சிற்றூழியர்
ஐபீஎம்பீபீ			1- உதவி வலையமைப்பு முகாமையாளர் 4- விஞ்ஞான உதவியாளர்கள்	
	1- பிரதி காசாளர் (ஒப்பந்த அடிப்படையில்) 1- சிரேஷ்ட உதவி பதிவாளர் 1- உதவிப் பதிவாளர்		1- தொழில் நுட்ப உத்தியோகத்தர் – தர..I 1.தொழில் நுட்ப உத்தியோகத்தர் – தர ।1..II seg. B	3- ஆய்வுகூட வேலையாள்
			6- முகாமைத்துவஉதவியாளர் 1- முகாமைத்துவ உதவியாளர் (கணக்குப் பதிவாளர்)	1- சாரதி
			1- தொலைபேசி இயக்குநர், வரவேற்பாளர்	
மொத்தம்	**3**		**15**	**04**

4. ஆய்வு, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகளின் விபரம்:

விடயம்	வெளியிடப்பட்டது	வர்ததகமயப்படுத்தப்பட்டது	சமர்ப்பிக்கப்பட்டது
அ.ஆய்வுகளின் எண்ணிக்கை எம்எஸ்சீஆய்வுப்பத்திரங்கள் பிஎச்டீ ஆய்வுக்கட்டுரை எம்பில்	14 2 -		
ஆ.புத்தாக்கங்களின் எண்ணிக்கை			
இ. சஞ்சிகைகளின் எண்ணிக்கை			
ஈ. நூல்களின் எண்ணிக்கை			
உ.. செய்தித்தாள் கட்டுரைகளி எண்ணிக்கை			
ஊ. கட்டுரைகளின் எண்ணிக்கை –சஞ்சிகைகளில் முழுப்பக்கம்	26		
எ. ஏனையவை (அய்வு, தொடர்பாடல்கள்)			15
Total	**42**		**15**

5. நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளின் விபரம்:

விடயம்	சமர்ப்பிக்கப் பட்டது	பூர்த்தி	சமர்ப்பிக்கப் பட்டது	பூர்த்தி
	2019		2020	
அ .பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	2	2	2	2
ஆ. பட்டப்பின்டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	3	-	2	1
இ. பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	-	-	-	-
ஈ. டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	-	-	-	-
உ. குறுங்கால பயிற்சிநெறிகள்/தொழிலமர்வுகள்/ செய்துகாட்டல்கள்.	4	4	-	-
ஊ. வருடாந்த கூட்டம்	1	1	-	-
எ சர்வதேச மாநாடு (4 கருத்தரங்குகளுடன்)	-	-	-	-
ஏ மூலக்கூற்று உயிரியல் மற்றும் நோய் எதிர்ப்பியலில் செய்துகாட்டல்களும் செயன்முறை செய்துகாட்டல்களும் • மரபணு சீக்குவென்சிங் பற்றிய செய்து காட்டல்´(உயிர் தொழில்நுட்பவியல் சிறப்பு மாணவர்கள், வயம்ப பல்கலைக்கழகம்) • Restriction Enzym disestion பற்றிய ஒரு நாள் நடைமுறை செய்துகாட்டல (University College Londonstudents) • உண்மை நேர பிசீஆர் பற்றிய செயன்முறை செய்து காட்டல் (வயம்ப பல்கலைக்கழக மாணவர்கள்)	 1 1 -	 1 1 -	 1 1 1	 1 1 1
மொத்தம்	**12**	**09**	**07**	**06**

* **ஒரு பட்டப்படிப்பு திட்டத்தின் காலம்** 18/36 **மாதங்கள்**

6. கிடைக்கப்பெற்ற விருதுகளின் விபரம்:

விடயம்	விருதுகளின் எண்ணிக்கை	கல்வியியலாளர் எண்ணிக்கை	மாணவர் எண்ணிக்கை	விருதுகளின் எண்ணிக்கை	கல்வியியலாளர் எண்ணிக்கை	மாணவர் எண்ணிக்கை
	2019			2020		
அ. உள்ளூர் விருதுகள்	4	-	4	1	2	2
ஆ. தேசிய விருதுகள்	15	13	2	9	9	-
இ. சர்வதேச விருதுகள்	-	-	-	1	1	1
ஈ .பயண விருதுகள்	-	-	-	-	-	-
மொத்தம்	**19**	**13**	**6**	**11**	**12**	**3**

7. மீண்டுவரும் செலவுகள் விபரம்: 2020

	விடயம்	2019 (Rs.)	2020 (Rs.)
a.	பணியாளர் வேதனங்கள்	91,296,891	94,851,104
b.	பிரயாணம்	144,406	64,892
c.	வழங்கல்கள்	9,543,309	13,030,002
d.	பராமரிப்பு	5,864,027	4,298,646
e.	ஒப்பந்தச் சேவைகள்	18,226,387	14,693,792
f.	ஏனையவை (பெறுமானத் தேய்வு அடங்கலாக)	24,682,640	29,600,720
	மொத்தம்	**149,757,660**	**156,539,156**

8. மூலதனச் செலவு விபரம்:

	விடயம்	2019 (Rs.)	2020 (Rs.)
a.	தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் கொள்வனவு	2,940,545	416,416
b.	யந்திரங்கள் கொள்வனவு(கணனிகள், ஆய்வு கூட உபகரணங்கள்)	15,416,172	5,041,086
c.	கட்டிடங்கள், நிர்மாணக் கட்டமைப்புகள் கொள்வனவு	0	0
d.	ஏனைவை (நூலக நூல்கள்)	650,449	0
e.	வாகனங்கள்	0	0
	மொத்தம்	**19,007,166**	**5,457,502**

9. கருத்திட்ட செலவு விபரம்(உள்நாட்டு/வெளிநாட்டு நிதியளிக்கப்பட்டவை):

பெயர்	2019 இல் செலவு (ரூபா)	2020 இல் செலவு (ரூபா)	31.12.2020 அன்று ஒன்று திரண்ட செலவு	பௌதீக முன்னேற்ற %
மானியங்கள்	14,612,233	4,833,843	19,446,075	2020 ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்ட பணிகள் நிறைவுற்றன
IFS	0	0	0	
IPIC	0	0	0	
சுவீடிய ஆராய்ச்சி மானியம்	0	11,146	11,146	
ஆராய்ச்சி தொடக்குதல் மானியம் (UGC))	0	16,604	16,604	
மொத்தம்	**14,612,233**	**4,861,593**	**19,473,826**	

10. நிதி முன்னேற்றத்தின் விபரம் (செலவு):

	விடயம்	2020இல் நிதி ஏற்பாடு (ரூபா)	2020இல் செலவு (ரூபா)	சேமிப்பு/ மிகை (ரூபா)
a.	மீண்டெழும் (கருத்திட்டம் தவிர்ந்த)		151,677,563	
b.	மூலதன (கருத்திட்டம் தவிர்ந்த)		5,457,502	
c.	கருத்திட்டம்- உள்நாட்டு நிதியளிப்பு- தேவிம மானியம்		4,861,593	
மொத்தம்			**161,996,658**	

*****பெறுமானத் தேய்வு கருத்தில் கொள்ளப்படவில்லை. * உருவாக்கிய வருமானத்திலிருந்தான செலவு உள்ளடக்கப்பட்டுள்ளது.

**செலவு செய்யப்படாத மூலதன மானியங்கள் கணக்கில் இருந்த நிதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

11. நிதி முன்னேற்றத்தின் விபரம் (உருவாக்கப்பட்ட வருமானம்):

	வருமான மூலம்	2020 இல் நிதி ஏற்பாடு (ரூபா)	2020 இல் சேகரிப்பு(ரூபா)	பற்றாக்குறை/மிகை (ரூபா)
a.	பட்டக் கற்கைகள்	பொருத்தமில்லை	பொருத்தமில்லை	
b.	பட்டப் பின் படிப்பு கற்கைகள்		15,962,443	-
c.	ஆலோசனை வழங்கள்		0	
d.	ஏனைவை		5,819,444	
மொத்தம்			**21,781,887**	

12. நிதிச் செயலாற்றுகை பகுப்பாய்வு -2020:

Rs'000

	Actual 2013	Budgeted 2014	Estimate 2015	Estimate 2016	Estimate 2017	Estimate 2018	Estimate 2019	Estimate 2020
மாணவர் எண்ணிகை	**MSc 34** MLS 16 CMI 07 BI 11 **MPhil/PhD 25**	**MSc 41** MLS 23 CMI 07 BI 11 **MPhil/PhD 21**	**MSc 60** MLS 30 CMI 15 BI 15 **MPhil/PhD 25**	**MSc 60** MLS 30 CMI 15 BI 15 **MPhil/PhD 33**	**MSc 33** MLS 19 CMI 14 BI - **MPhil/PhD 29**	**MSc 34** MLS 21 CMI 13 BI - **MPhil/PhD 32**	**MSc 52** MLS 19 CMI 14 BI 19 **MPhil/PhD 27**	**MSc 78** MLS 37 CMI 22 BI 19 **MPhil/PhD 26**
மாணவர் ஒருவருக்கான மீண்டெழும் செலவு	**MSc** Rs. 463,720/= **MPhil/PhD** Rs.1,319,107/=	**MSc** Rs. 306,490/= **MPhil/PhD** Rs.897,580/=	**MSc** Rs. 361,553 /= **MPhil/PhD** Rs.1,301,592/=	**MSc** Rs. 458,716 /= **MPhil/PhD** Rs.1,063,388/=	**MSc** Rs. 488,266/= **MPhil/PhD** Rs.1,287,607/=	**MSc** Rs. 617,445 /= **MPhil/PhD** Rs.1,078,930 /=	**MSc** Rs. 578,748 /= **MPhil/PhD** Rs.1,779,107 /=	**MSc** Rs. 431,177 /= **MPhil/PhD** Rs.2,010,954 /=
மாணவர் ஒருவருக்கான மூலதனச் செலவு	**MSc** Rs. 117,266/= **MPhil/PhD** Rs.239,224/=	**MSc** Rs. 117,073/= **MPhil/PhD** Rs.342,857	**MSc** Rs. 91,000/= **MPhil/PhD** Rs.327,600/=	**MSc** Rs.108,831/= **MPhil/PhD** Rs.252,291/=	**MSc** Rs.159,493/= **MPhil/PhD** Rs.272,237/=	**MSc** Rs. 184,402/= **MPhil/PhD** Rs. 294,173/=	**MSc** Rs. 145,990/= **MPhil/PhD** Rs. 421,750/=	**MSc** Rs. 136,568/= **MPhil/PhD** Rs. 614,557/=

*கல்விசார், கல்வித் துணை, தொழில்நுட்ப, ஆயவுகூட ஊழியர் சமபளங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**பாதுகாப்பு, மின்சாரம், நீர் உள்ளடக்கபபடவில்லை.

*** ஆய்வு மானியங்களின் தொகை வருட இறுதியில் கணிப்பிடப்பட முடியும்.

****ஆராய்ச்சி மானியங்களின் அடிப்படையில் MPhil/ PhD மாணவர் ஒருவருக்கான செலவு மாறுபடும்.

வருடவாரியான மாணவர் எண்ணிக்கையின் திரண்ட சுருக்கம் 2019 லிருந்து எம்எஸ்சீ/எம்பில்/பிஎச்டீ நிகழ்ச்சித்திட்டங்கள்

பட்டம்			2019	2020
மூலக்கூற்று உயிர் விஞ்ஞான முதுமானி	அனுமதி	புது அனுமதி	10	15
		தொடர்வோர்	-	03
		மொத்தம்	10	18
	வெளியேறுகை	PG Dip	-	-
		Master	-	02
		மொத்தம்	-	02
கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியல் முதுமானி	அனுமதி	புது அனுமதி	07	07
		தொடர்வோர்	-	02
		மொத்தம்	07	09
	வெளியேறுகை	PG Dip	-	01
		Master	-	-
		மொத்தம்	-	01
உயிர்த்தகவலியல் முதுமானி	அனுமதி	புது அனுமதி	19	-
		தொடர்வோர்	-	19
		மொத்தம்	19	19
	வெளியேறுகை	PG Dip	-	-
		Master	-	-
		மொத்தம்	-	-
மூலக்கூற்று உயிர் விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமானி	அனுமதி	புது அனுமதி	-	04
		தொடர்வோர்	15*	15*
		மொத்தம்	15	19
	வெளியேறுகை	MSc	05	06
கல மற்றும் மூலக்கூற்று நோயெதிர்ப்பியில் விஞ்ஞான முதுமானி	அனுமதி	புது அனுமதி	-	04
		தொடர்வோர்	09*	09*
		மொத்தம்	09	13
	வெளியேறுகை	MSc	02	06
உயிர்த்தகவலியலில் விஞ்ஞான முதுமானி	அனுமதி	புது அனுமதி	-	-
		தொடர்வோர்	-	-
		மொத்தம்	-	-
	வெளியேறுகை	MSc	-	-
MPhil/PhD	அனுமதி	புது அனுமதி	02	03
		தொடர்வோர்	24	23
		மொத்தம்	26	26
	வெளியேறுகை	பட்டதாரிகள்	09	02

* 2017/2018 இல் பதிவு செய்த மாணவர்கள் (2005-2018திரண்ட சுருக்கத்தைப் பார்க்கவும்)

வருடவாரியான மாணவர் எண்ணிக்கையின் திரண்ட சுருக்கம் - எம்எஸ்சீ/எம்பில்/பிஎச்டீ நிகழ்ச்சித்திட்டங்கள்

2005 லிருந்து 2018 வரை

		2004 June to Dec	2005*	2006	2007	2008	2009	2010	2011	2012	2013	2014	2015	2016	2017	2018	Total
எம்எஸ்சீ*(2005இல் தொடங்கியது)	மொத்தம்	-	8	18	25	24	24	33	34	34	34	42	33	34	34	31	
	புது அனுமதி	-	8	10	11	13	12	19	10	22	11	18	12	21	11	19	197
	தொடர்வோர்	-	-	8	14	11	12	14	24	12	23	24	21	13	23	12	
	வெளியேறுகை	-	-	-	3	11	10	8	8	17	11	8	18	17	12	15	138
MPhil/PhD	மொத்தம்	3	0	8	8	13	13	12	13	18	17	24	27	28	28	32	
	புது அனுமதி	3	0	5	1	5	1	1	1	11	7	6	3	4	6	5	59
	தொடர்வோர்	-	-	3	7	8	12	11	12	6	10	18	24	23	22	27	
	வெளியேறுகை	-	-	-	1	0	0	1	1	1	3	1	0	1	6	3	18
MSc ((நேரடியற்ற)	மொத்தம்	2	6	3	1	-	-	-	1	-	-	-	-	-		-	
	புது அனுமதி	2	4	1	-	-	-	-	1	-	-	-	-	-		-	8
	தொடர்வோர்	-	2	2	1	-	-	-	-	-	-	-	-	-		-	
	வெளியேறுகை	1		4		1				1						-	7
MPhil/PhD (நேரடியற்ற)	மொத்தம்	7*	6	4	6	5	8	6	3	1	6	4	5	4	4	7	
	புது அனுமதி	-	1	0	3	-	4	0	1	0	0	1	-	-	1	0	11
	தொடர்வோர்	7	5	4	3	5	4	6	2	1	6	3	5		3	4	
	வெளியேறுகை		1	2		1			3	1		3	1	1	-	-	13
பட்டப்பின்படிப்பு மாணவர்	மொத்தம்	12	23	33	40	42	45	51	51	52	57	70	65	63	66	70	
	புது அனுமதி	5	13	16	15	18	17	20	13	33	18	25	15	25	18	24	275
	தொடர்வோர்	7	10	17	25	24	28	31	38	19	39	45	50	-	48	43	
	வெளியேறுகை	1	1	6	4	13	10	9	12	20	14	12	19	19	18	18	176
பணியாளர் : மாணவர் விகிதம்		1:12	1:08	1:08	1:10	1:14	1:15	1:17	1:17	1:17	1:14	1:14	1:13	1:13	1:11	1:08	

* ஐபஎம்பீபீ க்கு வருவதற்கு முனனர் சரெக் மானியத்தின் கீழ் வேறு பீடங்களில் / பல்கலைக் கழகங்களில் பதிவு செய்த மாணவர்களை உள்ளடக்கும்.

சுருக்கம் 2004-2018	MSc	MPhil/PhD	மொத்தம்	
நேரடி பெறுபேறு	138	18	156	176
நேரடியற்ற பெறுபேறு	7	13	20	
நேரடி அனுமதி	197	59	256	275
நேரடியற்ற அனுமதி	8	11	19	